# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 52
விலை ரூபாய் 20.00

தீபம்-52 | புரட்டாதி இதழ் – 2018,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**ஞானமுள்ள பிள்ளைகள் தம் தந்தையை மகிழ்விக்கின்றனர். (நீமொ 10:01)**

## திருகோணமலை மறைமாவட்டத்தின் 125வது ஜூபிலி நிறைவுக் கொண்டாட்டம்

திருகோணமலை மறைமாவட்டம் தனது 125வது ஜூபிலியை கடந்த 25.08.2018 அன்று புனித மரியாள் பேராலயத்தில் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தது.

இம்மாபெரும் கொண்டாட்ட நிகழ்வுகளை மேலும் சிறப்பாக்க எமது மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும், யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும், மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா அவர்களும், எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்களும், குருக்கள், துறவிகள், மற்றும் பிரமுகர்கள் அனைவரும் Band வாத்திய இசை முழங்க வரவேற்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.



அதன் பின்னர் ஜூபிலி கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஜீபிலி வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் அனைவரும் பேராலய கலாசார மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஜூபிலி ஆண்டைக் குறித்து சிறப்புரைகளும். கலைநிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், விருந்தினர்களுக்கு ஜூபிலி ஆண்டின் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டது.

இம்மாபெரும் ஜூபிலி ஆண்டு சிறப்பு நிகழ்வுக்கு வருகை தந்த அனைவருக்கும் எமது நன்றிகளை உளமார தெரிவித்து நிற்கின்றோம். இவையனைத்தும் சிறப்புற நடைபெறுவதற்கு உதவிபுரிந்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


## இயேசுவோடு
## 12 மணி நேரம் | விசேட நற்கருணை ஆராதனை



இடம் : புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம்
காலம்: 13.10.2018 (சனிக்கிழமை)
நேரம் : மதியம் 12 மணி முதல் இரவு 12 மணி வரை

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக
**செபத்தில் இணைந்து கொள்வோம்**

### புரட்சியில் பூத்த மலர்
## அருட்பணி மேரி பிரான்சிஸ் யோர்தான் அடிகளார்
### சல்வட்ரோறியன் சபையின் ஸ்தாபகர்




புரட்டாதித் திங்கள் 8ம் நாள் வணக்கத்துக்குரிய அருட்பணி. மேரி பிரான்சிஸ் யோர்தான் அடிகளாரின் விண்ணக பிறந்த தினத்தை இறை மீட்பர் சபை (Salvatorian Fathers, Brothers, Sisters and lays) ஆகிய நாங்கள் நன்றியோடும் பக்தியோடும் நினைவுகூருகின்றோம். அருட்பணி பிரான்சிஸ் யோர்தான் அடிகளார் 1848 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 16ம் நாள் ஜேர்மனி கூட்வேய்ல் என்ற கிராமத்தில் பிறந்தார்.

இவர் தன்னுடைய இளம் பராயத்திலிருந்து ஏழ்மையையும் இறை பராமரிப்பையும் தன் வாழ்வில் இரண்டறக் கலந்து சுவைத்தார். திரு விவிலியம் கூறுவது போல "தாயின் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கும் முன்பே உன்னைத் திரு நிலைப்படுத்தினேன். மக்கள் இனங்களுக்கு இறைவாக்கினராக உன்னை ஏற்படுத்தினேன்" (எ1:5) என்ற இறைவாக்கை தன்னுடைய வாழ்வில் நன்கு உணர்ந்துகொண்டார்.

1789 தொடக்கம் 1799 காலப்பகுதியில் ஏற்பட்ட பிரான்சியப் புரட்சியின் விளைவாக முழு ஐரோப்பிய தேசமும் விசுவாச வாழ்வில் ஆட்டம் கண்டு நிலைகுலைந்த வேளையில் யோர்தான் அடிகளார் மக்களின் விசுவாச வாழ்விற்கு உரமூட்ட தன்னுடைய வாழ்வை கடவுளுக்கு அர்ப்பணிக்க முன்வந்தார். அவருடைய ஏழ்மையும், குடும்பச் சுமைகளும் அவரை வாட்டி வதைத்தாலும் கடவுள் மீது அவர் கொண்ட உறுதியான விசுவாசம், அவரை ஒரு அருட்பணியாளராக வருவதற்கு வழி வகுத்தது. அவர் தன்னுடைய குருத்துவ படிப்பை நிறைவு செய்து 1878 ஆம் ஆடித் திங்கள் 21ம் நாள் ஆயர் லோநூர்வோன் குப்பேல் ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்டார். இதன் பின்னர் நாளுக்கு நாள் இவருடைய இறை அனுபவம் ஆன்மீகத்தின் மீது இவர் கொண்ட அவா வளர்ந்து கொண்டே சென்றது. அருட்பணி யோர்தான் அடிகளாரிடம் காணப்பட்ட இறை விசுவாசம், வீரச் செயற்பாடுகள், விடா முயற்சிகள் இவை அனைத்தும் இறை மகன் இயேசுக்கிறிஸ்துவை எல்லா மக்களுக்கும் எடுத்தியம்ப உந்து சக்தியாக அமைந்தது. அத்தோடு அவரது புனித நகரத்துக்கான பயணமும், நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் கல்லறையைத் தரிசித்தபோது அவருக்கு கிடைத்த ஆன்மீக அனுபவமும் இவரின் இறை விசுவாசத்தை ஆழப்படுத்தியது.

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லாரின் சொற்கள் பிறருக்கு உணவாகும் (நீமொ 10:21)**

## உங்களோடு பேசுகிறேன்..

**Rev. Fr. T. கிங்ஸ்லி றொபட்**

புரட்டாதி மாதம் 14ம் நாள் திருச்சிலுவையின் மகிமை என்ற விழாவைக் கொண்டாடினோம். சிலுவை எப்படி திருச்சிலுவையாக மாறியது?

சிலுவைச் சாவு என்றால் அது உரோமையர்கள் கொண்டு வந்தது என்பது பலரின் கருத்து. ஆனால் உலகின் பல்வேறு அரசியல் அமைப்பு முறைகளை ஆராய்ந்தால் இந்தியர்கள், கிரேக்கர்கள், எபிரேயர்கள், உரோமையர்கள் என எல்லா "கலாச்சாரங்களிலும்" ஏதோ ஒரு வகையில் மக்கள் மரத்தால் அழிக்கப்பட்டிருக்கின்றனர். செலவில்லாத மரண தண்டனை சிலுவைத் தண்டனை. ஆகையால் தான் உரோமையர்கள் இதைக் கைக்கொள்கின்றனர். எதற்காக அழியப்போகும் கைதிகள் மேல் பணத்தைச் செலவழிக்க வேண்டும். மேலும் சிலுவை மரணத் தண்டனையில் யாரும் அருகில் இருந்து கவனிக்க வேண்டும் என்பதும் இல்லை.

இயேசுவின் காலத்தில் சிலுவைச் சாவு பல்வேறு வகைகளில் நிகழ்த்தப்பட்டது. வழக்கமாக மரண தண்டனை பெறுவோர் கொல்லப்பட்ட சிலுவை மரத்தில் ஏற்றப்பட்டனர். சிலுவையில் ஒருசிலர் அறையப்பட்டதாகவும், மற்றும் சிலர் கட்டப்பட்டதாகவும் ஜோசப் பிலேவியுஸ் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அவமானமாக கருதப்பட்ட சிலுவை அன்பர் இயேசுவின் மீது சுமத்தப்பட்டதால் சிறப்பானது. பரிசுத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்டது. திருச்சிலுவை மரமாக மாட்சிபெற்றது.

சிலுவை என்றவுடன் பலருக்குத் துன்பம், வேதனை, பாடுகள், கண்ணீர், கவலைதான் உடனே கவனத்திற்கு வரும். ஆனால் நம் ஆண்டவர் இயேசு மனித வரலாற்றின் அவமானச் சின்னமாக, கொலைக்கருவியாக இருந்த சிலுவையைத் தம் பாடுகள், மரணத்தால் வாழ்வின் சின்னமாக, வெற்றியின் கருவியாக மாற்றியதை உலகமே அறியும்.

சிலுவை, நம் இறைவன் விண்ணையும் மண்ணையும் இணைக்கப் பயன்படுத்தியது. மனிதனையும் இறைவனையும் இணைப்பது. பாவத்தின் பரிகாரம். அருளின் ஊற்று. தோல்வியின் அஸ்தமனம். வெற்றியின் உதயம். சாவின் சங்கொலி. உயிர்ப்பின் எக்காளம். இச் சிலுவையில் இயேசு உயர்த்தப்பட்டபோதுதான் அன்பு, தியாகம், தாழ்ச்சி இவற்றின் உண்மை முகம் உலகுக்கு உயர்த்திக் காண்பிக்கப்பட்டது.

இத்துணை மாண்புமிக்க திருச்சிலுவையை பலரும் பலவிதங்களிலே பாவித்துள்ளனர். எம் தாய்த் திருநாட்டின் திருத்தூதரான புனித யோசே வாஸ் அடிகள் பாவித்த "திருச்சிலுவை" இம்மாதம் எம் மறைமாவட்டம் முழுவதும் பவனியாக எடுத்துவரப்பட இருக்கின்றது. இவ்வாறு நம்மை வலம் வரும் "திருச்சிலுவையை" நாம் உற்று நோக்கினால் பல நன்மைகள் இடம்பெற வாய்ப்புக்கள் உண்டு என்பதை மனதார ஏற்றுக்கொள்வோம்.

சிலுவையைப் பார்க்கும் நம் ஒவ்வொருவருடனும் அது பேசுவதற்குத் தவறுவதில்லை. நீங்கள் சிலுவையை உற்றுப் பார்ப்பது உண்டா? புனித யோசே வாஸ் அடிகளாரின் "திருச்சிலுவையை" உற்றுப் பாருங்கள். அது உங்களோடு இப்படியும் பேசலாம்!!!

மனிதா! வெறுமையாக்கு உன்னை.

கடவுள் தன்மையை தன் பிறப்பில் இழக்கின்ற இயேசு, தன் மனிதத்தன்மையை சிலுவையில் இழக்கின்றார். முந்தையதை விட அதிக வலி தருவதாக இது இருந்திருக்கும். "இது எனக்கு! இன்னும் எனக்கு!" என்று அனைத்தையுமே சேர்த்துக்கொண்டே போகும் நம் நவீன கலாச்சாரத்திற்கு மாற்றுதான் இயேசுவின் வெறுமை. ?இது உனக்கு! இன்னும் உனக்கு!? என்று மாற்றுச் சிந்தனையைத் தருவதுதான் சிலுவை. இப்படிப் பேசும் சிலுவையை நாள்தோறும் சுமந்து இயேசுவைப் பின்பற்றுவோமா?

01ம்' பக்கத் தொடர்ச்சி......... **புரட்சியில் பூத்த மலர்.........**

யோவான் 17:3 கூறுவது போல "உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிதலே உண்மையான நிலைவாழ்வு" என்பதை தனது விருதுவாக்காகவும், பண்பாகவும் கொண்டு 1881 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 8ம் நாள் இவர் இறை மீட்பர் என்று அழைக்கப்படுகின்ற சல்வட்டோறியன் சபைக்கு அத்திவாரம் இட்டார். (The Society of the Divine Saviour). 7 ஆண்டுகளின் பின் அவர் முத்திப்பேறு பெற்ற அப்போஸ்தலர்களின் மரியாள் என்று அழைக்கப்படுகின்ற திரேசாவோன் வோபெல் என்ற அருட்சகோதரியின் உதவியுடன் இறைமீட்பர் சகோதரிகள் சபையைத் தோற்றுவித்தார். (Salvatorian Sisters).

இவற்றுடன் அவர் பணி நின்றுவிடவில்லை. இருட்கடலில் தனித்து விடப்பட்ட பயண-ிகளின் கதியைப்போல யோர்தான் அடிகளாருக்கு பல துன்பங்களும், சுமைகளும், சவால்களும் பல திசைகளிலிருந்தும் தாக்கிக்கொண்டிருந்தது. ஆனால் தந்தை அவர்கள் கடவுள் மீது கொண்ட அசைக்க முடியாத உறுதியான விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் அனைத்தையும் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொண்டார். எத்தகைய சூழ்நிலையிலும் அவர் கடவுளால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை மறந்துவிடவில்லை. தான் வாழும் காலத்திலேயே அவர் தன்னுடைய மறை போதகப்பணியை ஆசியா, அமெரிக்க, மற்றும் ஆபிரிக்காவிலும் ஆரம்பித்தார்.

தன்னுடைய இவ்வுலக வாழ்வின் இறுதிக்காலத்திலும் கூட பல ஆன்மீக காரியங்களை மகிழ்ச்சியுடன் செய்வதைக் கண்டவர்கள் சாட்சியம் மூலமாக எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். குறிப்பாக

தினமும் பலமணி நேரம் செபம் செய்வதிலும், நற்கருணை கடவுள் முன் முழந்தாள் படியிட்டு மனதுக்குள் செபிப்பதிலும் அவர் தன்னுடைய நேரத்தை செலவு செய்தார். ஈற்றில் தந்தையவர்கள் நோயுற்று படுக்கையில் இருக்கும்போது கூட தினமும் நற்கருணை பெறுவதில் தவறுவதில்லை.

தன்னுடைய இறுதிநேரம் அவரை அண்மித்தபோது இவர் தன்னுடைய சகோதர்களிடம் அப்பணியை ஒப்படைத்துவிட்டு இறைமகன் இயேசுக்கிறிஸ்து கல்வாரி மலையில் உச்சரித்த ?எல்லாம் நிறைவேறிற்று? என்று கூறி 1918 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 8ம் நாள் மனுக்குல அன்னையின் மண்ணுலக பிறந்த தினத்தன்று விண்ணக வாழ்விற்குச் சென்றார். தந்தையவர்கள் மரி யன்னை மீது கொண்ட அளப்பரிய பக்தியும், விசுவாசமும் இதன் மூலம் புலனாகின்றது.

இறைமீட்பர் சபையானது (Salvatorian) பார் முழுவதும் பரந்து விரிந்து இருக்கின்ற திரு அவையில் பற்பல மறை பணிகளை ஆற்றிவருகின்றது. இச்சபையானது ஏறக்குறைய 44 நாடுகளில் மறைபோதகப்பணியைப் புரிந்து வருகின்றது.

எமது தாய்நாட்டிலும் பல மறைமாவட்டங்களில் கல்விப்பணி, சமூகப் பணி, ஆன்மீகப் பணி என பலதரப்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றது. எமது நாட்டிலே நடைபெற்ற வன்செயல்கள், இயற்கை அனர்த்தங்கள் காரணமாக அநாதை-தகள் ஆக்கப்பட்ட பிள்ளைகளை பராமரிப்பதன் மூலம் இயேசுக் கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு வழங்குவதில் சிறப்பான பணிகளை மேற் கொண்டுள்ளது. வயோதிபர் இல்லம், சிறுவர் இல்லம் என்பன இறை மீட்பர் சபை யால் ஆரம்பிக்கப்பட்டு வயோதிபர்களும், சிறுவர்களும் இறை அன்புடன்பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இறை மீட்பர் சபையின் ஸ்தாபகரான அருட்பணி மேரி பிரான்சிஸ் யோர்தான் அடிகளாரின் விண்ணக வாழ்வின் 100 ஆவது ஆண்டை (1918 - 2018) நினைவுகூரும் இந்நாளில் இவருடைய புனித வாழ்வை நாம் அனைவரும் பின்பற்றி வாழவும், அவரது கனவை நனவாக்கவும் எல்லாம் வல்ல இறைவனை மன்றாடுவோம்.

அருட்பணி மைக்கல் பிரபு
இலங்கைக்கான சபை இணைப்பாளர்
இறைமீட்பர் சபை
இல. 131. பாங்சால் வீதி. குருநகர் - யாழ்ப்பாணம்

## இறைவன் நம்மை நம்புகிறார்!



அக்டோபர் மாதம் செபமாலை அன்னையின் மாதம் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. செபமாலை நற்செய்தியின் சுருக்கம் என்று சொல்லுவார்கள். இந்த விதத்திலே எவ்வாறு விவிலியத்தை அறியாதோர், கிறிஸ்துவை அறியாதோர் என்பது உண்மையோ அவ்வாறே செபமாலையை செபிக்காதவர் கிறிஸ்துவை அறிந்து கொள்ள முடியாது என்பதும் உண்மைதான். செபமாலை மாதமாகிய இந்த அக்டோபர் மாதத்திலே செபமாலையை தனிநபராகவோ அல்லது குடும்பமாகச் சேர்ந்தோ செபிப்பதற்கு முயற்சி செய்வோம். நிச்சயமாக அன்னை மரியாள் நாம் இயேசுவுக்கு அருகில் வருவதற்கு துணைபுரிவாள்.

இந்த பின்னணியிலே, அன்னை மரியாளுக்கும் நமக்கும் இடையேயுள்ள உறவைப் பற்றி சற்று ஆழமாக சிந்தித்துப் பார்ப்போம். அன்னை மரியாளைப் பற்றி பேசும்போது பொதுவாக மக்கள், அன்னை மரியாளை ஒரு சிலர் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை? மரியாள் நமக்குத் தேவையா? மரியன்னை மேல் பக்தி கொண்டிருப்பதால் பயன் என்ன? போன்ற கேள்விகளைத் தான் கேட்பார்கள். இந்தக் கேள்விகளை விடுத்து சற்று ஆழமாக யோசித்து எதற்காக அன்னை மரியாளுக்கு திருச்சபையிலே இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது? எதற்காக இவ்வளவு வணக்கம் செலுத்துகின்றோம்? எதற்காக அவரைப் பேறுபெற்றவர் எனப் போற்றுகின்றோம்? என்று ஆழமாகக் கேள்விகளைக் கேட்பது பயனுடையதாக இருக்கும்.

அன்னை மரியாளுக்கு நாம் இவ்வளவு வணக்கமும் மரியாதையும் செலுத்துவதற்கு காரணம் அவள் இறைவனின் தாய் என்பதற்காக மட்டுமல்ல. மாறாக விசுவாசத்தின் தாய் என்பதால்தான். புனித அகுஸ்தீனார் அழகாக சொல்வார், "அன்னை மரியாளை நாம் பேறு பெற்றவள் என்ற போற்றுவதற்குக் காரணம் அவள் இயேசுவைப் பெற்றெடுத்ததற்காக அல்ல. மாறாக வானதூதர் வழியாக தனக்கு அருளப்பட்ட இறைவாக்கு நிறைவேறும் என்று உறுதியாக நம்பினதால் தான்". மரியாள் முதலில் நம்பினாள், பிறகு 'ஆகட்டும்' என்று சொன்னாள். இறுதிவரை இறைவனுக்கு பிரமாணிக்கம் உடையவளாக இருந்தாள். இத்தகைய வாழ்க்கையை வாழ்பவர்கள் தான் இயேசுவின் உண்மையான சீடர்கள்.

இயேசுவை தன் உதிரத்தில் கருத்தரிக்கும் முன்பே உண்மையான சீடனுக்குரிய மனநிலைகளை அன்னை மரியாள் தன்னகத்தே கொண்டிருந்ததால், "இயேசுவின் தாயாக மாறுவதற்கு முன்பே அன்னை மரியாள் இயேசுவின் சீடராக இருந்தாள்" என்று அகுஸ்தீனார் கூறுவார்.

இதற்காக தான் அன்னை மரியாளுக்கு இவ்வளவு வணக்கமும் மரியாதையும் செலுத்துகின்றோம். அவர் இறைவனின் தாய் என்பதற்காக மட்டும் அல்ல. அதைவிட மேலாக அவர் நம்பிக்கையின் (விசுவாசத்தின்) தாய் என்பதால் இயேசுவின் முதல் சீடர் என்பதால்.

நாம் அனைவரும் இறைவனை நம்புகின்றோம். ஆனால் இறைவன் ஒருவரை முழுமையாக நம்பினார். அவர்தான் அன்னை மரியாள். தனது மகனுக்கு தாயாக இருப்பதற்கு தகுதியானவள் மரியாள் மட்டும் தான் என்று இறைவன் நம்பினார். அவரது ஒத்துழைப்பைக் கேட்டார். மரியாளும் "ஆம்" என்று சொல்லி இறைவன் தன்மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்யாமல். அந்த நம்பிக்கைக்கு களங்கம் ஏற்படுத்தாமல் இறுதிவரை பிரமாணிக்கமான வாழ்க்கையை வாழ்ந்தார். எனவே நாமும் தினமும் செபமாலையை ஓதுவோம். அன்னை மரியாவின் முன் பிரமாணிக்கமாய் வாழ்வோம்!

நன்றி - விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்

தொடர் - 16

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

## அமைதித் தூதுவன்



பல மாணவர்கள் ஒன்றுகூடுகின்ற இடத்தில் சண்டைகளுக்கும் சச்சரவுகளுக்கும் குறைவே இராது. இச்சண்டைகளில் பெரும்பாலானவை பாரதூரமானவையல்ல. அவை விரைவில் மறக்கப்பட்டு விடுவனவாகும். ஆசிரியர் அருகில் இருப்பாரானால் இவ்வாறான சண்டை சச்சரவுகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவார். ஆசிரியரின் கண்காணிப்புக்கு அப்பால் உருவான சண்டைகளையும் சமாளித்து சண்டையிட்டோரையும் சமாதானம் செய்து வைத்துவிடுவார்.

மாணவர்களிடையே தினமும் சண்டைகளும் சச்சரவுகளும், காயங்களையும், கசப்புத்தன்மைகளையும் ஏற்படுத்தி நீண்டகாலம் தொடருமாக இருந்தால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஆசிரியர் பிரத்தியேக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். இவ்வாறான சூழ்நிலையில் மாணவர்களிடையே சமாதானத்தையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த ஆசிரியர் மிகுந்த நிதானத்தோடும் பொறுமையோடும் செயற்பட வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் அமைதி ஏற்பாட்டாளராக செயற்படுவதற்கு எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர் தனது உள்ளுணர்விலும் மனத்திலும் அமைதி உள்ளவராகத் திகழ்வது இன்றியமையாததாகும்.

தொட்டதுக்கெல்லாம் முன்கோபமும் நச்சரிப்பும் கொண்ட ஆசிரியரால் மாணவர்களின் பிணக்குகளை சுமுகமாகக் கையாள்வது கடினமானதாக அமையக்கூடும். ஆகவே, ஆசிரியர் தனது உணர்வுகள், மனவெழுச்சிகள், நடத்தைகள் மட்டில் முதிர்ச்சியுடையவராகத் திகழ வேண்டும். தன்னைத்தானே சுய மீளாய்வுக்கு உட்படுத்துபவராகவும் தனது பலம் பலவீனங்களை நன்கு அறிந்து வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் தன்னளவில் கொண்டுள்ள அமைதி, பொறுமை, சகிப்புத்தன்மை போன்றவற்றைப் பொறுத்தே மாணவர்களிடையே சுமுக நிலையும், நல்லிணக்கமும், நல்லுறவும், நிலவ வாய்ப்புக் கிட்டும். இவ்வாறான ஆசிரியர் நிச்சயமாக நல்லாசானாகிய இறைவனின் துணையை நாடுபவராகவிருப்பார் என்பதில் ஐயமில்லை. மனித வல்லமையோடும் இறைஞானத்தோடும் செயற்படும் ஆசிரியரே அமைதியின் தூதுவனாகத் திகழ முடியும்.

# சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் ஞானப்பெற்றோர் ஆண்டு 2018.08.12

## விசேட திருப்பலியும் ஞானப்பெற்றோர் சிறப்பு நிகழ்வுகளும்

எமது மறைமாவட்டத்தின் செயற்திட்டங்களுக்கு அமைவாக ஆவணிமாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு எமது பங்கில் பங்குத்தந்தையின் வழிகாட்டலுக்கு அமைவாக ஞானப்பெற்றோர் தினத்திருப்பலி வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் 05 ஞானப்பெற்றோரும் பிள்ளைகளும் தெரிவு செய்யப்பட்டதோடு, அதிகமான பிள்ளைகளுக்கு ஞானப்பெற்றோராய் இருந்தவர்களை அன்பிய ரீதியாக தெரிவு செய்து ஞானப்பதிவேட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டது. அவர்கள் அனைவரையும் ஞானப்பெற்றோர் அவர்களது ஞானப்பிள்ளைகள் ஞானப்பெற்றோராய் இருந்த அவர்களின் ஞானப்பிள்ளைகள் என தொடர் அணியாக ஆலய முன்றலில் கூடியிருந்த வேளை எமது பங்குத்தந்தை அருட்பணியாளர். I. யூட் சர்வானந்தன் அடிகளாரும், சிறிய குருமட அதிபர் அருட்பணி X. I. ரஜீவன் அடிகளாரும், அன்பியக்கொடி மற்றும் பங்குக் கொடி ஏற்றினார்கள். அதனைத் தொடர்ந்து திருப்பலிக்கு ஆரம்பப் பவனியில் ஞானப்பெற்றோர் பிள்ளைகள் என முன்செல்லும்போது பதாதைகள் ஏந்தியவர்களாய் உவகையோடு பங்கேற்றனர். அவர்களைத் தொடர்ந்து இரு தந்தையர்களும் திருப்பலியை நிறைவேற்றுவதற்கு மனமகிழ்வோடு பவனியில் இணைந்திருந்தார்கள். திருப்பலிக் கொண்டாட்டத்தில் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே எண்ணமும் கொண்டு பங்கெடுத்தனர். வழக்கமாக நற்செய்திக்குப் பின் அருட்தந்தையர்களால் மறையுரை ஆற்றப்படுவதுண்டு.

ஆனால் அன்றைய தினம் வழக்கத்திற்கு மாறாக காட்சிகள் மூலம் மறையாசிரியர்கள், மறைமாணவர்களினால் பெற்றோரின் கடமைகள் என்ன? பிள்ளைகளுக்கு என்ன பெயர் வைக்கிறார்கள்? ஞானப்பெற்றோரை எவ்வாறு தெரிவு செய்கிறார்கள்? பணமா? வெளிநாட்டில் வாழ்பவர் என்ற பெருமையா? என்பதோடு ஞானப்பெற்றோர்கள் என்பவர்கள் யார்? அவர்களது கடமைகள் என்ன? பிள்ளைகளை எவ்வாறு ஞானவழி நடத்துகிறார்கள்? அவர்களின் நிலை தற்போது எவ்வாறுள்ளது? பெற்றோர், ஞானப்பெற்றோர், ஞானப்பிள்ளைகளின் தொடர்பாடல் என்ன நோக்கத்தைக் கொண்டு வாழப்படுகின்றது? என்பதை தத்ரூபமாக செயல்வடிவம் கொடுத்து நடித்துக் காண்பித்தார்கள். உண்மையில் அந்த செயல்பாடுகள் ஊடாக எல்லோரையும் தங்களின் தற்போதுள்ள நிலையை எண்ணிப்பார்க்கவும், உணரவும் நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கியது எனலாம். இதற்கு களம் அமைத்துக் கொடுத்தவர் எம் பங்குத்தந்தை என்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

அதன்பின் அன்றைய தினத்திற்கு மேலும் வலுவூட்ட நிபந்தனையற்ற திருமுழுக்கு சிறுவர்களுக்கும் வயது வந்த ஒருவருக்கும் கொடுக்கப்பட்டது. இதுகூட ஞானப்பெற்றோர் ஆண்டின் சிறப்புத்தன்மையை மேம்படுத்த தேடலின் விளைவாகவும், ஒரு நினைவு கூரலாகவும் அமைந்தது எனலாம். திருப்பலிக் கொண்டாட்டத்தின் பின் தெரிவு செய்யப்பட்ட ஞானப்பெற்றோர்களை சிறப்பிக்கும் நிகழ்வு ஆரம்பமானது.

1951ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து மேடையில் அமர்த்தி மாலைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். பின் ஞானப்பெற்றோர் வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டது. தூய ஜோசப்வாஸ் சிறிய குருமட அதிபரினால் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துப்பா மடல் வழங்கி வைக்கப்பட்டது. பங்கிலுள்ள ஒவ்வொருவரின் ஞானப்பதிவுகள் அடங்கிய பதிவேடு எமது பங்குத்தந்தையினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதில் மக்கள் ஆர்வத்தோடு தம் விபரங்களை தேடிய விதமும் ஒற்றைகளைப் புரட்டிப் பார்த்ததையும் ஒருவித மனமகிழ்வோடு காணக்கூடியதாய் இருந்தது.

ஞானப்பெற்றோர் ஒருவரிடம் இன்றைய நிகழ்வு எவ்வாறு இருந்தது என பங்குத்தந்தையினால் கேட்கப்பட்டது. 'இவ்வாறு இன்றைய நிகழ்வுகள் சிறப்பு மிக்கதாக இருக்கும் என நான் எண்ணவில்லை என்றும் மனதிற்கு மிகவும் சந்தோசமாய் இருந்ததாகவும் ஞானப்பெற்றோர், ஞானப்பிள்ளைகள் உறவு என்றும் உயிரோட்டமுள்ள வாழ்வாக இருக்க வேண்டும் என்றும், ஒருவரை ஒருவர் சந்திக்க நேரம் ஒதுக்கி உறவை வளர்க்க வேண்டும்'' என்ற கருத்தையும் முன் வைத்தார். அன்றைய நாளின் சிறப்புமிக்க ஓர் நிகழ்வின் மகிழ்வாக மறைக்கல்வி மாணவர்கள், மறையாசிரியர்கள் ஒழுங்கு செய்த விற்றலும் வாங்குதலும் (Bring & Buy Sale) இடம்பெற்றமையும் எம் மனங்களை கொள்ளை கொண்ட மறக்கமுடியாத ஒரு நன்நாளாக அமைந்தது என்பது வெற்றியே.

## ஞானப்பெற்றோர் வாழ்த்து

ஞானப்பெற்றோராய் நீங்கள் இருப்பதனால்
தரணியில் நாங்கள் மகிழ்கின்றோம்
சீராளன் இயேசுவின் அன்புப்பாதையில்
சீரிய சிந்தனையுன் ஞானப்பெற்றோராய்
அறியா பருவமதில் அர்ப்பணித்த உங்கள்
அன்புக் கரங்களை வாழ்த்துகிறோம்
அண்ணல் இயேசுவின் அருளாகி
அன்றாடம் பொழிய வேண்டுகின்றோம்
நன்றி கூறுகின்றோம் ஞானப்பெற்றோரே
நலம் பெற வாழ்த்துகின்றோம் ஞானப்பெற்றோரே

அருட்பணி. I. ஜூட் சர்வானந்தன்
பங்குத்தந்தை

பங்கு மக்கள்
புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்
சாம்பல்தீவு

திருமதி. ஸ்ரெலா ஜெரோம்
சாம்பல்தீவு

புகைப்படம் 12ம் பக்கத்தில் .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியால் நிறைந்து...

ஜீபிலிக்காக வெளியான திருமலைத் தீபமானது மிகவும் காத்திரமான விடயங்களை உள்ளடக்கி வலம்வருவதை இட்டு பெருமகிழ்வும் பூரிப்பும் அடைகின்றேன்.

வரலாறுகளை வாசித்து அறிய விரும்பாமலே வாழும் எம் மனிதர்கள் மத்தியில் வரும் சவால்களை ஏற்று போராடி, வரலாறு படைத்த உழைத்த ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார் அனைவருக்கும் இறைவன் அருளிய பேரின்பத்தைக் காணவும், உழைத்துக் களைத்தக் கொண்டிருக்கும் பணியாளர்களும் இறைமகிமைக்காக செயலாற்றவும் திடமனதாய் இருக்கும் இவ் ஜீபிலி ஆண்டில் நாமும் அவர்களைப் பாராட்டி தோழமையோடு அவர்களுக்காய் செபிப்போம், வாழ்த்துவோம், துணைநிற்போம்.

இப்பத்திரிக்கை வெளிவர உதவும் எமது அருட்பணியாளர் தே. கிங்ஸ்லி றொபட் (மறைப்பல்விப் பணி தலைவர்), அவர்களுக்கும் மறைக்கல்வி நடுநிலையத்தில் பணியாற்றும் ஒவ்வாரு நல் உள்ளங்கள் சகோதர, சகோதரிகளுக்கும் மனமுவந்த விசேட நன்றிகளும், பாராட்டுக்களும் உரித்தாகட்டும். மிகவும் உற்சாகத்தோடு மறைபணிகளில் ஈடுபட வாழ்த்துகின்றேன்.

பேராலயப் பங்கு மகள்
மதுரா கெனடி

## ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை



வாழ்வளிக்கும் வள்ளலை
வாரி வணங்கிடும் - வேளையிலே
வாழ்வின் உன்னதத்தை
அறிய வைத்தது - மனமுவந்த காணிக்கை

செல்வரும் செருக்குக் கொண்டவரும்
வெளிவேடக்காரரும் - அளித்த
காணிக்கை பார்ப்பவரைக் கவர்ந்தது
காரணம் காலத்தின் பிடிக்குள்
அவர்கள் ஆனந்தமாய் களிக்கும்
ஆடம்பர வாழ்க்கையே - தம்மை
உயர்வாகக் கருதி மனித
மாண்பை மறந்து - ஆடம்பரமாய்
செலுத்தும் காணிக்கை
ஆண்டவருக்கு ஏற்றதல்ல


உள்ளத்தின் சுமைகளை
சோகமாய் சுமந்தவளாய்
உன்னத இறைவனை
புனிதமாய் நினைத்து - அவள்
நொறுங்கிய உள்ளத்துடன்
மனமுவந்து அளித்திட்டாள்
தாராள உள்ளத்துடன்
தரணியில் வாழும் முழுப் பணத்தையுமே

ஏற்றிட்டார் இறைவன்
நொறுங்குண்ட உள்ளத்தில்
உன்னத காணிக்கையினை
அதுவே ஏழைக் கைம்பெண்ணின்
காணிக்கை

தனக்கென ஒன்றுமில்லை
தரணியில் வாழும் காலமெல்லாம்
தன்னைக் காத்திடும் இறைவனே
தஞ்சம் எனக் கைம்பெண்
உள்ளத்தின் ஆழத்தை - எமக்குள்
பொறித்து உண்மையாய் வாழ்ந்திடுவோம்
உன்னதரைப் போற்றிடுவோம்

யே. பிரதிக்ஷா
திரு இருதய ஆண்டவர் ஆலயம்,
இருதயபுரம்

## பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



சென்ற இதழ் தொடர்ச்சி ..........

### 16.கொண்டாட்டமும் ரொமேரோவும்

ரொமேரோவின் கொர்சிலோ சகோதர சகோதரிகள் நிகழ்ச்சிக்கான அனைத்து செலவுகளையும் ஏற்றனர். சான் மிகுவேலைச் சார்ந்த அவருக்குப் பழக்கமான பலர் வந்து கூடினர். எல் சால்வதோர் ஜனாதிபதி தனது பிரதிநிதிகளைத் திருநிலைப்படுத்தும் நிகழ்வுக்கு அனுப்பியிருந்தார். ரொமேரோவின் விருப்பத்திற்கு மாறாக மிகப்பெரிய கொண்டாட்டமாக அது நடந்தது. ஆதரவாளர்களோடு எதிர்ப்பவர்களும் இருந்தனர். அவர் பழமைவாதி எனவே வேண்டாம் என்றனர். இரண்டாம் வத்திக்கான் மற்றும் மெடலின் கருத்துக்களுக்கு எதிரானவர் என வாதிட்டனர். ஏழை நாட்டில் இவ்வளவு பெரிய கொண்டாட்டம் எதற்கு என்றனர். ரொமேரோ எளிய கொண்டாட்டத்திற்கு ஆதரவானவர். ஆனால் கொண்டாட்டம் அவரைத் தாண்டிய செயலாக அமைந்தது எதிர்ப்பவர்களுக்குத் தெரியாது. ஆவர் எளிமையை விரும்பியது ஆதரவாளர்களுக்கும் தெரியாது.

### 17. உதவி ஆயர் ரொமேரோ

உதவி ஆயராக அருட்பொழிவு பெற்ற ரொமேரோ வயதான பேராயர் லூயிஸ் சாவஸ்க்கு உதவினார்.

சாவஸ் இரண்டாம் வத்திக்கானின் புதிய சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு அவற்றின் பல அம்சங்களை தனது மறைமாவட்டத்தில் செயல்படுத்தினார். சமூக முற்போக்கு சிந்தனை குறைந்த, கோட்பாடுகளில் ஆர்வம் காட்டிய திருச்சபையின் அதிகார படிநிலை சார்ந்த ரொமேரோவுக்கு இது பெரும் சவாலாக இருந்தது.

பேராயருக்குக் கீழ்ப்படிந்து அனைத்தையும் நன்றாக செய்தாலும் நம்பிக்கையாலும் அர்ப்பணத்தாலும் அவர் உந்தித்தள்ளப்படவில்லை.

### 18. கசப்பை உணர்ந்த ரொமேரோ

ரொமெரோவுக்கு இந்த உதவி ஆயர் பொறுப்பு சற்றுக் கடினமாக இருந்தது. அவரது கோட்பாடுகளுக்கு ஒத்துப் போகவில்லை. அவர் என்றும் மாறா, ஒரு போதும் தவறிழைக்கா பாறை போன்ற திருச்சபையை நேசித்தார்.

அதனால் மக்களோடு மக்களாக துன்பத்தில் பங்கெடுத்த நபர்களுக்கும் ஆயரின் சிந்தனைகளுக்குமிடையே மிகப்பெரிய இடைவெளி தென்பட்டது.

மக்களோடு பணியாற்றிய, அரசியல் அநீதங்களை எதிர்த்த குருக்கள் ஆயருக்கு எதிரானவர்கள், திருச்சபையை நேசிக்காதவர்கள் என்று ஆயர் நம்பினார். குறிப்பாக மக்களோடு ஒன்றித்திருந்த இயேசுசபைக் குருவானவர்கள் ஆயருக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்கள் என நம்பினார்.

ஆனால் துவக்க காலத்தில் ஆயர் இயேசுசபைக் குருக்களை தியானம் கொடுக்க அழைத்தார். தனது ஒப்புரவு அருட்சாதனத்திற்கு இயேசு சபைக் குருக்களிடம் சென்றார். நாளடைவில் இயேசு சபைக் குருக்களிடமிருந்து விலகினார்.

"ஓபுஸ் தேயி" என்ற பழமைவாத திருத்தந்தைக்கு விசுவாசமான திருச்சபையின் பழமைவாத போதனையை ஆதரிக்கும் குழு பக்கம் திரும்பினார். 1972இல் இயேசு சபைக் குருக்கள் பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றப்பட்டபோது ரொமேரோ இதற்கு ஆதரவாக இருந்தார். இயேசு சபையினரும் இதை மறக்கவில்லை.

ஆயரானதால் அவர் நிலவுடைமையாளர்களோடும், பணக்காரர்களோடும் சேர்ந்து விட்டார் என்றே நினைத்தனர். இரண்டாம் வத்திக்கான் சங்கம் இத்தகைய மிகப்பெரிய அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தக் காரணம் உண்டு. மக்கள் தொகையில் 4% நபர்கள் வசதி படைத்தவர்கள். அவர்களுக்கு எல்லா வசதிகளும் உண்டு. 96% மக்கள் வறுமையில் வாழ்ந்தனர். இதற்கு மேல் வரிச்சுமை. போராடியவர்கள் தாக்கப்பட்டார்கள். இது எல் சால்வதோரில் தினமும் நடந்தது. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் மெடலினும் மாற்றுச் சிந்தனையை ஆதரித்தன. அநீத அரசை எதிர்ப்பது சரி என்பதை உறுதிப்படுத்தின. ரொமேரோ இத்தகைய செயல்களை ஆதரிக்கவில்லை. மாறாக அதிர்ந்தார்.


### 19. அவிலா தெரேசாவும் ரொமேரோவும்

ரொமேரோ வன்முறைக்கு ஒருபோதும் ஆதரவில்லை. எனது நோக்கம் சரியானது: ஆனால் செயல் தவறானது. நல்லது ஒன்றைசெய்ய அது எவ்வளவு மகத்தானதாக இருந்தாலும் சிறு தீங்கிழைப்பதும் சரியானதல்ல? என்ற அவிலா தெரேசம்மாளின் வார்த்தைகளை ஆயர் ரொமேரோ மேற்கோள் காட்டினார்.

மேலும் ஆண்டவர் இயேசு கெத்சமெனி தோட்டத்தில் பாடுகளின் போது பேதுருவுக்குச் சொன்ன வார்த்தைகளான வாளை உறையில் போடு தந்தை எனக்கு அளித்த துன்பக்கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ? (யோவா 18:11) என்ற விவிலிய வார்த்தைகளை மேற்கோள் காட்டினார். நிறுவனத் திருச்சபையின் நிலைப்பாடே ரொமேரோவின் நிலைப்பாடாக இருந்தது. நில உடமையாளர்களும், அரசும் அதையே நிலைப்பாடாகக் கொண்டிருந்தனர். எனவே சக குருக்களிடமிருந்து அவர் அந்நியப்பட்டிருந்தார்.

தொடரும்.....................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

# அன்பின் மகிழ்வு

**அருட்தந்தை. ஏ. ஏ. நவரெட்ணம்**
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## அலகு - 8 பிள்ளைகளின் கல்வி

இல. 259 - பெற்றோர்கள் பிள்ளைகளின் அறநெறி வளர்ச்சிக்கு தூண்டுதலாக இருக்க வேண்டும். அதற்கான நல் முயற்சிகளை மேற்கொள்ளும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட வேண்டும்.

இல. 260 - பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாதிக்கும் பல்வேறு விடயங்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்களுக்கு கருத்துச் செறிவுமிக்க உதவி, ஆலோசனை, வழிகாட்டலை வழங்க வேண்டும்.

இல. 261 - அதேவேளையில் பெற்றோர் வழிகாட்டல் எனும் தொனிப்பொருளில் பிள்ளைகளின் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் அடக்கியாள நினைப்பது ஆரோக்கியமானதல்ல, அவ்வாறான செயல்கள் அவர்களது சரியான முதிர்ச்சி, சுதந்திரம், அறநெறி, தனித்துவம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு உதவாது.

இல. 262 - முதிர்ச்சி, புத்தாக்கம், உண்மையான சுதந்திரம் போன்றவற்றிற்கு பயிற்சி வேண்டும். அத்தகைய சுதந்திரத்தின் கனிகள் முக்கியமானதாகும்.

இல. 263 - குழந்தைகளின், பிள்ளைகளின் சரியான அறநெறி வளர்ச்சிக்கு பெற்றோரின் அரவணைப்பு, அவதானிப்பு, முன்னுதாரணங்கள் அவசியமானதாகும்.

இல. 264 - பெற்றோர்கள் அவர்களது பிள்ளைகள் நன்மையானவற்றை நாடித்தேடத் தேவையான சிந்தனையை அவர்களுக்குள் வளர்த்திட பல்வேறு வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இல. 265 - சிந்தனையில் வளர்வதற்கு மேலாக சில செயல்கள் நல்லவை, அவை தமக்கும் வரும் நாட்களில் நன்மை செய்வதற்கு நன்மை பயக்குமென பிள்ளைகள் உணரவேண்டும்.

இல. 266 - நல்ல அறநெறி பழக்க வழக்கங்கள் தொடர்ச்சியான நற்செயல்களினூடாக வளர்க்கப்படுகின்றன.

இல. 267 - பல்வேறு வழிகளில் வளர்த்தெடுக்கப் படுகின்ற சுதந்திரமானது நமக்குள் விழுமியத்தை வளர்க்க உதவுவதுடன், நல்ல மனித வாழ்வை வாழவும் உதவுகின்றது.

இல. 268 - தனிமனித சுதந்திரத்தில் வளர்வதற்கு இளையோர்கள் தங்களது தவறான பழக்க வழக்கங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

இல. 269 - இளமையைக் கட்டியெழுப்ப வாழ்வில் திருத்தங்கள் அன்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்திருத்தங்கள் கோபத்திலிருந்து வரக்கூடாது, அத்துடன் அவை தவறுக்கு பொருத்தமானதாகவும் இருக்கவேண்டும்.

இல. 270 - அத்திருத்தங்கள் அவர்களை ஊக்கமிழக்கச் செய்யக்கூடாது மாறாக, அவர்களது மாண்பினை கட்டியெழுப்ப உதவவேண்டும், மேலும் அவர்களுக்குள் பொறுப்புணர்ச்சியினையும், நம்பகத்தன்மையினையும் ஏற்படுத்த வேண்டும்.

இல. 271 - இளையோர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தம் அவர்களது வயதுக்கு தகுந்ததாகவும், ஏற்புடையதாகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் தோற்கடிக்கப்பட மாட்டார்கள்.

இல. 272 - வளர்ந்தோரின் தவறான முன்னுதாரணங்கள் இளையோர்கள் அறநெறி உருவாக்கத்தை ஏற்றுக்கொள்வதை தடுக்கும். அதேவேளையில் அவர்கள் நன்னடத்தையில் வாழ்கின்ற வளர்ந்தோரின் முன்னுதாரணங்களைக்காண பரிந்துரைக்கப்படுகின்றபோது, அவ்வாறே அவர்களில் காணப்படும் நல்லுதாரணங்களைக் காணும்போது, இளையோரின் காயங்கள் ஆற்றுப்படுத்தப்படுகின்றது. அவ்வாறே உருவாக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கான ஆற்றலில் வளர்வார்கள்.

இல. 273 - பல்வேறுபட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு இளையோரும் தங்களது வயது, பருவத்திற்கு தகுந்தாற்போல் சுதந்திரத்தில் வளர்ந்திட உதவிட வேண்டும்.

இல. 274 - ஆணோ/பெண்ணோ தனது வீட்டைவிட்டு வெளியேறுகின்றபோது அவனது/அவளது வீட்டில் ஆதரிக்கப்பட்ட மறுபக்கத்தில் வெறுக்கப்பட்ட விழுமியங்கள் அவர்களது சிந்தனையை உருவாக்குவதில் தாக்கம் செலுத்துகின்றன.

இல. 275 - வாழ்வில் உடனடி மகிழ்வினைத் தரக்கூடிய வாழ்க்கை முறையில் அதிக சோதனைகள் காணப்படுகின்றன. அத்தகைய சூழ்நிலைகளில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பலனை உடனடியாகவல்ல மாறாக எதிர்பார்த்திருக்கின்ற பொறுமையினைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

இல. 276 - குடும்பத்தில் ஒருவர் ஒருவருடன் நெருக்கமாகவும், ஆதரவுடனும் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே குடும்ப உறுப்பினர்கள் உலகமெனும் சமூகத்துடன் அர்ப்பணிப்புடன் உறவாட தயாரிக்கும்.

இல. 277 - குடும்பத்தில் ஒருவர் ஒருவருடன் உறவுகொள்ளவும், கனிகொடுக்கவும் கற்றுக் கொள்கின்றோம். அதுவே சமூகம் என்கின்ற முழுமையின் அடிப்படையாகும்.

இல. 278 - குடும்ப வாழ்வில் பொழுதுபோக்கு மற்றும் தொடர்பு சாதனங்கள் மட்டில் குடும்பங்கள் மிகுந்த சிந்தையுடையர்களாய் இருப்பதுடன், அவற்றை நல்ல முறையில பயன் படுத்துவதுடன், அவை குடும்பத்திற்கு எதிர் மறை தாக்கங்களைக் கொண்டு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இல. 279 - குடும்பம் பிள்ளைகளுக்கொரு பாதுகாப்பான சுற்றாடலாக இருப்பதுடன், பிள்ளைகளை வெளித் தொடர்புகளிலிருந்து அளவுக்கதிகமான முறையில் தடுத்து நிறுத்தாமலும் இருத்தல் வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் அடுத்தவரிடமிருந்து கற்றுக் கொள்ளவும், அவர்களை நம்பவும், உலகில் கிறிஸ்துவின் அன்புடன் உறவாடவும் வேண்டும்.

இல. 280 - பிள்ளைகள் பாலியல் கல்வியினை பெற்றுக்கொள்ள வேண்டும். இக்கல்வியானது மானிடரைக்குறித்த உண்மையான பொருளினை அவர்களுக்கு விளக்கிக்கூற வேண்டும்.

இல. 281 - வயதுக்குத் தகுந்த பாலியல் கல்வி புகட்டப்பட வேண்டும். அக்கல்வியானது இளையோர் எத்தகைய காரணிகளை வாழ்வில் தவிர்க்கவும், எவற்றை வாழ்விற்கு சாதகமானதாக ஏற்றுக்கொள்ளவும் உதவவேண்டும்.

இல. 282 - பாலியல் கல்வியின் முக்கியத்துவம் யாதெனில், மனிதனை ஒரு பொருளாக பாவிப்பதிலிருந்து பாதுகாப்பதாகும்.

இல. 283 - இக்கல்வியின் மையம் யாதெனில், இளையோர் எவ்வாறு தங்களையே உண்மையான கொடையாக அளிக்கமுடியும் என்பதனை கற்பதாகும்.

இல. 284 - உண்மையான அன்பற்ற பாலியல் உடலின் பொய்யான (போலியான) செயற்பாடாகும். அது மக்களை காயத்துக்குள்ளாக்கி தனிமைப்படுத்தும்.

இல. 285 - ஆண், பெண் பால் வேறுபாட்டினை புரிந்துகொள்ளுதல், அதனை ஏற்றுக்கொள்ளுதல் என்பது தனிப்பட்ட, உறவு நிலை ஆரோக்கியத்தின் அங்கமாகும்.

இல. 286 - ஆண்மை மற்றும் பெண்மை ஆகிய இரண்டும் பிரதான காரணிகளும் பல்வேறுபட்ட தாக்கங்களால் உருவாகுவதாகும். அவை இரண்டுக்கும் இடையே பாரிய அத்தியாவசிய வேறு பாடுகள் உண்டு, ஆயினும் அவை மக்கள்மீது திணிக்கப்பட்ட -தாகவோ அல்லது மிகைப்படுத்தப்பட்ட இறுக்கமான காரணியாகவோ இருக்கமுடியாது.

இல. 287 - அன்புடன் கூடிய குடும்பமே குழந்தைகளின் (பிள்ளைகளின்) முதல் மறைக்கல்வி மற்றும் நம்பிக்கை உருவாக்கத்தின் இல்லிடமாகும்.

இல. 288 - நம்பிக்கை உருவாக்கல் பயிற்சியானது பிள்ளைகளின் தேவைக்கு ஏற்றாற்போல் இடம்பெற வேண்டும். நம்பிக்கை வாழ்வில் பிள்ளைகள் வளர்வதற்கு பொற்றோரின் தனிப்பட்ட சான்று பகர்தலே இந்த உருவாக்கத்தில் பிரதான விடயமாகும்.

இல. 289 - குடும்பத்தில் வளர்கின்ற நம்பிக்கை வாழ்வானது, இயற்கையாகவே குடும்பத்தை கடந்து வியாபித்து செல்லும்.

இல. 290 - உடல்சார், ஆன்மாசார் இரக்கச் செயல்களினூடாக குடும்பங்கள் சமூகங்களை மாற்றியமைக்கும் மேய்ப்புப்பணி முகவர்களாகச் செயற்படுகின்றார்கள்.

(அலகு 9 அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புனித மாற்கு ஒத்தமை நற்செய்தி

சென்ற இதழ் தொடர்ச்சி ......

**ஒத்தமை நற்செய்தியும் இரட்டை மூலக் கொள்கையும்**

ஒத்தமை நற்செய்தியாளர்களில் மாற்கு நற்செய்தியை முதன்மையாகக் கொண்டு மத்தேயுவும் லூக்காவும் தம் நற்செய்தியை புனர்ந்துள்ளனர் என்ற கருத்தையே இதுவரை அலசி ஆராய்ந்தோம். அதனடிப்படையில் ஒத்தமை நற்செய்தி நூல்கள் குறித்த சில சிக்கலுக்கான தீர்வு யாதெனில் 'Two - Source Theory" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் "இரட்டை மூலக் கொள்கையாகும்". இக்கொள்கையின் விளக்கம் யாதெனில் மூன்று நற்செய்திகளிடையே நிலவும் ஒற்றுமைக்குக் காரணம் மாற்கு நற்செய்தியினை மூலமாகக் கொண்டு மத்தேயுவும், லூக்காவும் தமது நற்செய்திகளில் அதனைப் பயன்படுத்துகின்றனர். பிறகு மாற்கில் இல்லாத ஆனால் மத்தேயுவிலும், லூக்காவிலும் உள்ள பகுதிகளுக்கு அவர்கள் வேறு ஒரு மூலத்தினைச் சார்ந்துள்ளனர் என்றும் இதனை (ஜேர்மன் மொழியில் Gulle) 'மூலம்' என்றும் அழைக்கின்றோம். பிறகு லூக்காவிலும், மாற்கிலும் இல்லாமல் மத்தேயுவில் மட்டும் உள்ள சில சிறப்புப் பகுதிகளை மத்தேயுவுக்கே உரிய சிறப்புப் பகுதிகள் என்று அழைக்கலாம். இதனை 'M' என்ற ஆங்கில எழுத்தில் குறிக்கலாம். அதே போல் மத்தேயுவிலும் மாற்கிலும் இல்லாமல் லூக்காவில் மட்டுமே உள்ள பகுதிகளை லூக்காவிற்கே உரிய சிறப்புப் பகுதிகள் என்றும் அழைக்கலாம். இதனை 'L' என்ற ஆங்கில எழுத்தில் குறிக்கலாம். இப்படி சிறப்புப் பகுதிகளை சேர்த்துக் கொள்வது ஒத்தமை நற்செய்தி நூல்களுக்கு உரிய சிக்கல்களுக்கான விடையைச் சுருக்கமாக தருவது ஆகும்.

இன்று எம் கைகளுக்கு வந்து சேர்ந்திருக்கும் நான்கு நற்செய்தி நூல்களில் மாற்கு எழுதிய நற்செய்தி நூலே காலத்தால் முந்தியது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஏறக்குறைய கி.பி 65 ஆம் ஆண்டையொட்டி ஆக்கப்பட்ட இந்நூலைப் பயன்படுத்தியே மத்தேயு நற்செய்தி எழுதப்பட்டது.

தொடரும்....................

ஞானப்பெற்றோரின் முக்கியத்துவமும்

# ஞானம் பற்றிய தெளிவான சிந்தனையும்



அருட் சகோ. எமர்சன் றாகல்,
மெய்யியல் பீடம்
தேசிய குருமடம், கண்டி.

**01. ஞானம் என்றால் என்ன - மெய்யியல் விளக்கம்**

ஞானம் பற்றிய தெளிவை அடைய நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு உள்ளது.

1.எமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட விடயங்கள்

2.எமது கட்டுப்பாட்டுக்கு உட்படாத விடயங்கள்

இவை பற்றிய தெளிவு எமக்கு அனைத்தையும் புரிந்துகொள்ளும் ஆற்றலை தருகின்றன. எமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட விடயங்கள் என நாம் நோக்கும் வேளையில் எங்களுடைய 'சுய விருப்பம்' முதன்மை பெறுகின்றது. எமது சுய விருப்பத்தின் கீழ் உள்ள எமது உணர்வுகள், எம் சிந்தனை, சிந்தனையை ஒட்டிய செயற்பாடு, எமது விருப்பு வெறுப்பு என்பவை எம்முடைய கட்டுப்பாட்டுக்குட்பட்டவை.

எமது கட்டுப்பாட்டுக்கு உட்படாதவை என சில விடயங்கள் எமது சமூகத்தில் உள்ளது நாங்கள் சட்டத்துக்கு, நியமங்களுக்கு, நெறிமுறைகளுக்கு, மனித நேயத்துக்கு, இறை சித்தத்திற்கு கட்டுப்பட்டவர்கள். இதனை நாம் தவிர்க்க முடியாது. எவர் ஒருவர் இதனை அறிந்துகொள்ள முட்படுகின்றாரோ அவர் தாம் எதிர்கொள்ளும் அனுபவங்களுக்கு தம்மை ஒரு ஆரோக்கியமான, ஆளுமை கொண்ட மனப்பாங்கு உடையவராக மாற்றிக் கொள்வார்.

எனவே, இவ்வகை விழிப்புணர்வு எம்மிடையே காணப்பட்டால் மாத்திரமே ஞானமுள்ள ஒரு மனிதனாக எம்மால் செயற்பட முடியும்.

**ஞானம் - அறிவு - நம்பிக்கை**

ஞானம் எப்பொழுதும் அறிவு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது. இதன் மூலம் நாம் ஞானத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொள்கின்றோம்.

ஞானத்தின் பிரதானமான இலக்கு நாம், யதார்த்தமான சூழ்நிலையில் நல்ல நெறி முறையான வாழ்க்கை வாழ்வதற்கு அடிப்படையாக பகுத்தறிவை கொண்டிருக்க வேண்டும் என்பதே ஆகும். ஞானமானது, அறிவுத்தெளிவுடன் அனுபவங்களை ஆய்ந்தறிந்து தீர்வு காணும் அல்லது நேரிய வழியை தேர்ந்தெடுக்கும் பண்பை குறித்து நிற்கின்றது. எனவே இது எம்முடைய கட்டுப்பாட்டுக்குட்பட்டதொன்று. ஞானம் எப்பொழுதும் அனுபவத்துடன் தொடர்புடையது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் நம்மை எவ்வாறு இசைவாக்கிக் கொள்கின்றோம். எவ்வகையான தெளிவான சிந்தனையில் செயற்படுகின்றோம் என்பதனை குறிக்கின்றது. இதனாலேயே வயது முதிர்ந்தவர்கள் ஞானமுள்ளவர்கள் என கருதப்படுகின்றனர். காரணம் அவர்களின் அனுபவ ரீதியான அறிவுத்தெளிவு, வாழ்வு பற்றிய ஞானத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கிறது. எனினும் "வயது" ஞானத்திற்கான வரையறை அல்ல, மாறாக அறிவுத்தெளிவும் அனுபவமேயாகும். ஞானத்திற்கான தேடலை தனிமனித அனுபவம் அல்லது சமூகம் கற்பித்துக் கொடுக்கின்றன.

தொடரும்.........................

சென்ற இதழின் தொடர்ச்சி....



# விவிலியம் ஒரு குடும்பக் காவியம்

## தலைமுறை தலைமுறையாய் பாவத்தில் உழல்வோமா? இல்லை அதை அறவே ஒழித்து, உண்மையில் உயர்வோமா?

"என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களை பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைகள் மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்" எனும் இறைவாக்கை (விப 20:56) எப்படிப் புரிந்து கொள்வது? அதாவது. முந்தைய தலைமுறையினரின் பாவத்தால் விளைந்த இயற்பொருள் சார் தீமையை ஏற்றுக் கொள்ளலாமே தவிர, அவர்களின் அறநெறிசார் தீமைகளை அவர்கள் தம் தலைமுறையின்பால் சுமத்துவது எப்படிப் பொருந்தும்?

இவ்வகை வினாவிற்கான விடையைத் தேடும்போது ஒரு குறிப்பை நாம் தெளிவாக நம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். ஒரு தலைமுறையினர் பாவம் அடுத்தத் தலைமுறையினர் மேல் அப்படியே (பாவமாகவே) சாரும் என்று எந்த இடத்திலும் விவிலியம் கூறவில்லை. முந்தைய தலைமுறையினர் கட்டிக் கொண்ட பாவம் அடுத்துவரும் தலைமுறையினருக்கு அப்படியே சாராது. ஆனால் ஒரு தலைமுறையினர் கட்டிக் கொண்ட பாவம், பழக்கவழக்கமாகி, அந்தப் பாவப் பழக்க வழக்கங்களே அவர்களின் பண்பாடாக மாறி, காலப்போக்கில் கலாச்சாரமாகவும் கலந்து போகக் கூடிய ஆபத்து நேரலாம். இவ்வாறு பாவப்படுத்தப்பட்ட பண்பாட்டிலும் கலாச்சாரத்திலும் பிறந்து வளரும் பிள்ளைகள், பாவ உணர்வே இல்லாத தலைமுறையாக தலையெடுத்து, பாவக் கடலிலேயே மூழ்கி திக்குமுக்காடும் நிலை உருவாகி விடலாம்! அத்தகு சூழ்நிலையில் அடுத்தடுத்து வரும் தலைமுறையினர் அனைவருமே முந்தைய தலைமுறையைப்போலவே, கடவுளைப் புறக்கணித்துத் தம் சொந்த ஆபாசங்களுக்கு அடிமையாகி, இறைவன் இட்ட ஆணைகளையே மறந்து, மறுத்து வாழ்ந்தால், முந்தைய தலைமுறையினரின் அறநெறித் தீமையை விட அதிதீவிர நெறிகேடு தான் பெருகும்!

அதற்கான ஒரே தீர்வு, அந்தத் தலைமுறையினர் தாமாகவே தம் பாவச் சூழமைவை உணர்ந்து, அதை அறவே ஒழித்து விட்டு, தமது உண்மையான இறைஇயல்பைத் தெளிந்து தேர்ந்து. அவ்வுண்மையைக் கடைப்பிடித்து ஒழுகினால் ஒழிய அவர்களுக்கு உயர்வே இல்லை. இதைத்தான் மேற்சொன்ன விவிலியக் கூற்றுக்கு அடுத்துவரும் இறைவாக்கு இவ்வாறு உறுதிப்படுத்துகின்றது.

"மாறாக, என் மீது அன்பு கூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்" (விப 20:6)

இவ்வுண்மையை விளக்குவதாக அமைகின்ற குடும்பம் தான் நோவாவின் குடும்பம். இம்மாமனிதரின் உயர்வைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு முன்னதாக, நிலவிய பாவச்சூழலையும் இவ்வாறு விவிலியம் விளக்குகிறது. "மண்ணில் மனிதர் பெருகத் தொடங்கி, அவர்களுக்குப் புதல்வியர் பிறந்தபொழுது,...... தாங்கள் தேர்ந்து கொண்டவர்களையெல்லாம் மனைவியர் ஆக்கிக் கொண்டனர். அப்பொழுது ஆண்டவர், "என் ஆவி தவறிழைக்கும் மனிதனில் என்றென்றும் தங்கப் போவதில்லை. அவன் வெறும் சதைதானே" (தொநூ 6:1-3) என்று நொந்து கொள்கிறார் கடவுள். அதாவது, மண்ணால் உருவான சதையும் இறைஆவியும் இணைந்த மனிதன் தன் இறைசாயலை அதாவது இறைஆவியை மறந்து தசைக்குரிய இச்சைகளுக்கே முதன்மை அளித்து பாவச் செயல்களில் ஈடுபடும்போது இறை ஆவியைப் புறக்கணித்து விட்டான் என்பதைத்தான் மேற்காணும் வாசகம் சுட்டிக் காட்டுகிறது. மேலும் அந்தத் தலைமுறையே பாவக் கடலில் மூழ்கிவிட்டது என்பதைக் காட்டும் வகையில், "மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார்......"மனம் வருந்தினார்" (தொநூ 6:5-6) என்று திரு ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பாவச்சூழல் எத்துணை அளவுக்கு அந்தத் தலைமுறையை வாட்டி எடுத்தது எனின், அந்தத் தலைமுறை முழுவதையும் அழிப்பதை தவிர வேறு வழியேயில்லை என்னும் பொருள்பட "அப்பொழுது அண்டவர் நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன்" (தொநூ 6:7) எனும் முடிவுக்கு வந்து விடுகின்றார்.

ஆனால் நோவாவுக்கு ஆண்டவரின் அருள்பார்வை கிடைத்தது', என்று திரு ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது நம் கவனத்தை ஈர்ப்பதாக அமைகின்றது. காரணம், 'தம் காலத்தவருள் நோவா நேர்மையானவராகவும். குற்றமற்றவராகவும் இருந்தார். நோவா கடவுளோடு நடந்தார்". ( தொநூ 6:9)

தொடரும்..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிய வடிவினிலே



சில்லென்ற தென்றலும்
சிலிர்த்திடும் தேகமும்
அழுதிடும் குழந்தையும்
அரவணைக்கும் தாய்மையும்

அழகிய காட்சிகள்
அதிர வைக்கும் - நினைவலைகள்
வாழ்க்கையின் துயரங்கள்
தூய இறைவனின் நல்லாசிகள்

நேரமோ எட்டரை
பயணக் களைப்பில்
வந்தது நித்திரை
கண் விழித்துத் - தொழுதேன்
கர்த்தரை

ஈரைந்து மாதங்கள் ஏக்கத்தின்
பிடியில் - வறுமையின்
சாயல் என்னை வாட்டியபோது
ஏக்கமொன்றே என்
ஏற்றமாக இருந்தது

தூய உள்ளத்துடன்
துணிந்து செயற்பட
அன்பியம் ஆனதுவே
அன்பு உள்ளங்களும் மலர்ந்ததுவே

**ஆக்கம்: யே. றெபேக்கா**
**திரு இருதய ஆண்டவர் ஆலயம்,**
**இருதயபுரம்**

# ஒளிர்ந்திடும் தீபங்கள்



ஜென்ம பாவத்தின் கழுவாயாய்
திருமுழுக்கைப் பெற
அழைக்கப்பட்ட - நல்
இறைகுடும்பம் ஞானப்பெற்றோர்

திருமுழுக்கின்
உன்னத பெற்றோராய்
உரைத்திடும் வாக்குறுதிகள்
உரிமையின் உயர்வினை
அளித்திடுமே

திருச்சபை வழி செல்லும்
நல் தீபங்களாய் ஒளிர்ந்திட
உன்னத பெற்றோராய்
உண்மையுடன் செயற்படுவோம்

**ஆக்கம்: முகுந்தன்**
**திரு இருதய ஆண்டவர் ஆலயம்,**
**இருதயபுரம்**

# நல்லதை வேண்டுவோம்

**அருட்பணி N.C. அருள்வரதன்**



அமைதிகள் மறைந்து
அதர்மங்கள் தெரிகின்றன
வன்முறைகளின்
கொக்கரிப்புக்களால்
பள்ளிச்சிறுவர்கள்
பாலியல் வல்லுறவுக்குள்ளாகி
மரணிப்பது பெரும் வேதனையே

இக்கொடிய நிலைகளுக்கு
உள்ளாக்கி அழிப்போரை
மிகக்கொடும் தண்டனையால்
தண்டிக்கும்போது
எதிர்கால நிலைகளில்
மாற்றங்கள் ஏற்படும் உண்மையே

தீயவையும் தீமைகளும்
மறைந்து விடும்போது
தூயவை உதயமாகி
துலங்குமே பெருமிதமாய் எனவே
நல்லவைகள் உயர்ந்தெழுந்து
நலங்காண வேண்டுவோமே

# அன்பின் வழிகளிலே ...........


**சரியான கவிதை வரிகள்**

அன்பினால் வளர்ந்து நாளும்
ஆற்றுவோம் பணிகளையே
பிறர் நலம் பேணியே எங்கும்
பெரும் பணி புரியும் போது
நிறைந்திடும் மகிழ்வாலங்கு
நிலைபெறுமே அமைதி அங்கே
அன்பின் உணர்வுகளை
அடித்தளமாய்க் கொண்டு நாங்கள்
முன்னெடுக்கும் கருமங்கள்
முற்றிலும் வெற்றி தரும் எனவே
அன்பினை மறவாமல்
அறவழி தொடருவோமே

பரிசுக்குரியவர் :
சு. கௌசல்யா
இல : 216:.12,
சுடரொளி ஒழுங்கை,
பாலையூற்று

**பங்குபற்றியோர் : 21 பேர்**
**மிகச் சரியாக வடிவமைத்தவர் : ஒருவர்**

# சிலுவையே தவறாத மீட்பே உலகத்தின் நம்பிக்கை நீயே



நெடுக்கு சட்டம் நீ இறையே
குறுக்கு சட்டம் நான் மனிதனே
உன்னிலே என்னைப் பொருத்தியதாலே
இன்று சிலுவை வானகத்தின் வாயிலே

எனக்கா நீ சுமந்து பலியும்
பலிப் பொருளுமானாய்
உன்னோடு இணைந்திருக்க நானும்
சுமக்கின்றேன் அன்றாட சிலுவையை
உன் சுமை பெரிது அன்று
என் சுமையோ எளிது எப்போ
நீயும் என்னோடு சேர்ந்து சுமக்கின்றாய்
என தேர்ந்து தெளியும் போது

பழியும் பாவமும் உனக்கு ஏனோ
சுகமான சுமைகளானது எமக்காய்
பலவீனமும் பாவமும் கனக்கிறது
பெருஞ்சுமையாய் எனக்கு
என்னில் நீ வரும்போது எல்லாம்
எளிது எனக்கு உன் சுமை
அழுத்தாது, என்பதே என் நம்பிக்கை



சிலுவை ஊடாக உயிர்ப்பு
சிலுவை வெற்றியின் இரகசியம்
சிலுவை என் வாழ்வின் மூலைக்கல்
சிலுவை என் அடையாளம்
சிந்திப்போம்
சிலுவைகளை சின்னமாய் ஏற்று
கேடயமாய் பாவித்து
உலகம் சரீரம் பசாசோடு போராடுவோம்
பொருந்துவோம் மூவொரு இறைவனோடு

**ஆக்கம் - அலோஷியஸ் கெனடி**

# மரியாயே எங்கள் மாதாச்சியே ! மரியாயே எங்கள் மாதாச்சியே




என்னைப் பாருங்கம்மா
மாலையானதும்
தவறாமல் அப்புச்சி அம்மா
அண்ணாச்சி தம்பி தங்கச்சியோட
குடும்ப செபமாலை சொன்னோமே!
இன்று..?
நான் ஒரு கையையும் இரண்டு கால்களையும்
இழந்துவிட்டேனம்மா
நான் முன்னாள் போராளியுமல்ல
எனது அம்மா அப்புச்சி எல்லோரையும் இழந்தவன்
அம்மா என்ன செய்வேன் !

முழந்தாள்படியிட்டு உம்மை
தோத்தரிக்க கால்களில்லையம்மா
குரம் கூப்பி உம்மை வணங்க
என்ன செய்வேன் !
ஒற்றைக் கரம் கொண்ட
அவலட்சணமானவன் நான்!
ஆனாலும் தாயாரே
ஒற்றைக் கைவிரல்களாலே
உமை நோக்கி
செபமாலை தினமும் சொல்லுகின்றேன்
எனக்கு எதுவுமே வேண்டாம்!
மாதாச்சி
எமது பரிசுத்த பாப்பரசர்
ஆயர்கள் குருக்கள்
பொதுநிலைக் குருத்துவத்தார்
இவர்களை காப்பாற்றும் தாயே
தாயே மாதாச்சி
பிதாவாகிய சர்வேசுரனிடத்தில்
அவர்களுக்காக
பரிந்துரை செய்யும் தாயே!
எனது உள்ளத்தில்
ஒற்றைக்கை வலிக்கின்றதம்மா
எனது மன்றாட்டை
ஏற்றருளும் தாயே!

**கலைக்கோட்டன். அ.இருதயநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதயபுரம் திரு இருதய ஆண்டவர் ஆலயம்



எமது மறைமாவட்ட யூபிலி ஆண்டை சிறப்பிக்கும் முகமாக திருமலைத்தீபம் பத்திரிகையில் பங்குகளின் ஆரம்ப காலம் மக்களின் பொருளாதார வாழ்வாதார நிலைமைகள் வாழ்விடங்கள் தற்போதைய நிலை என்பவற்றுடன் ஆரம்ப கால இக்கால குருக்களின் விபரங்கள் செயற்பாடுகள் என்பவற்றை நேரடியாக வாய்மொழித் தகவல் மூலமாக முதியவர்கள், இளைஞர்கள், பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினேன். அதிலிருந்து,

இருதயபுரம்!!! வயலும் வயல் சார்ந்த நிலமும் மலையும் மலை சார்ந்த இடமும் என்று எவ்வாறு சொன்னாலும் அதற்கு இசைந்து போகின்ற இயற்கையோடு ஒத்துப்போகின்ற ஓர்கிராமம் அது எப்பகுதியில் இருந்து பார்த்தாலும் அழகாகவே காட்சியளிக்கின்றது. பச்சை நிறத்தினாலும் நீரோடைகளாலும் தன்னை சரியாக அழகுப்படுத்திக் கொண்ட கிராமம். அங்குள்ள மக்களைப் போலவே அனைத்துப் பகுதிகளும் செழிப்பாகவே காணப்படுகின்றது.

வயல்வெளிகள் சூழ்ந்து மலைகளால் பாதுகாக்கப்படுவதைப் போல எனக்குத் தோன்றிட்டு


இது எவ்வாறு அமையப்பெற்றது என இக்கிராமத்தில் தனது சிறுபராயம் முதல் இன்றுவரை வசித்து வருகின்ற சமூக சமய தொழிற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இன்று ஓய்வாக இருக்கின்ற திரு.சுபியான் தேவதாசன் "போடியார்" என்று சொன்னால் தான் அனைவரும் தெரிந்து கொள்வார்கள்.அவரைக் கேட்டேன்???? அயல் கிராமமான பெரியவெளியில் கிராமத்தின் எல்லைகளில் வயல்வெளிக்கு நடுவே அமைந்திருக்கின்ற இந்து ஆலயம் ஒன்றிற்கு பின்புறமாக காணப்படுகின்ற பச்சன் வெளி என்று அழைக்கப்பட்ட காட்டுப்பகுதியில் ஓர்சிறு கிராமமாக??.கிராமம் என்று சொன்னேன் 10 குடும்பங்களுக்கும் குறைவாக இருந்ததாக தனது தகப்பனார் தன்னிடம் கூறியதாக என்னிடம் சொன்னார்.

அவ்வாறு காட்டுப்பகுதியில் வாழ்ந்த மக்களை 1912ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூதூர் பங்கின் பங்குத் தந்தையாக இருந்த சார்ல்ஸ் டொனால் அவர்கள் சென்றுசந்தித்து கதைத்து இருதயபுர பழைய ஆலயம் அமைக்கப்பட்ட காணியினை அன்றி அம்மக்களை குடியேற்றுவதாகவும் பச்சன்வெளியில் இருந்து அவர்கள் வந்து குடியேறி வாழ்ந்து வந்ததால் "பச்சனூர்" அழைக்கப்பட்டதாகவும் நம்பப்படுகின்றது.

பச்சன் என்றால் என்ன என்று கேட்டேன் தனக்கு சரியாக தெரியவில்லை என்று கூறினார். மனதிற்குள் நினைத்துக்கொண்டேன் பச்சன் என்பவருக்கு சொந்தமான வெளியாக பெரியவெளி கிராமத்திற்கு அடுத்ததாக இது அல்லது முற்றிலும் பச்சையாகவே எப்போதும் காட்சியளித்துக்கொண்டு இருப்பதனால் காரணப் பெயராகலாம்.மக்களால் அது அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம் என்று இருதய ஆண்டவர் ஆலயம் அமையப்பெற்றுள்ளதால் அது இருதயபுரம் என பின்னர் வழங்கப்படலாயிற்று.

காலப்போக்கில் மக்களின் தேவைகள் அதிகரிக்க பங்குத்தந்தையர்களின் அறிவுரைக்கமைய சற்றியுள்ள பகுதிகளின் நிலங்களை துப்பரவு செய்துமக்கள் குடி-யேறியதாகவும் தான் தற்போது வாழ்கின்ற நிலமும் அவ்வாறு துப்பரவு செய்து காடுகளை அழித்து உருவாக்கப்பட்டதுதான் என்று தன்னுடைய பிள்ளைப்பருவ கால நினைவுகளையும் அக்கால மக்கள் எவ்வாறு காணிகளை உரிமையாக்கிக்கொண்டார்கள் என்பதையும் கூறி தன்னுடைய நினைவுகளை மீட்டுக்கொண்டார்.இவ்வாறாக இக்கிராமம் சுற்றிலுமாக பரந்துசென்றுள்ளது.








கல்வியின் முக்கியத்துவத்தினை அன்றே அளித்துக் கொண்டு அனைத்து மக்களுக்கும் வழிகாட்டிய எமது ஆரம்பகால குருக்கள் இருதயபுர மக்களுக்கும் அதனை சுற்றியுள்ள அனைத்துக் கிராம மக்களுக்கும் கல்வி புகட்டும் முகமாக ஊர் பாடசாலையை அமைத்து கல்வி அறிவூட்டி அப்பாடசாலைக்கு இருதய ஆண்டவர் பாடசாலை எனப் பெயரும் வைத்தனர். 20க்கும் மேற்பட்ட கிராம மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி அறிவூட்டிய தாய்ப் பாடசாலை அது. இன்றும் தனது சேவையினை சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றது.

1957ஆம் ஆண்டு எமது நாட்டின் கிழக்குப்பகுதிக்கும் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கில் இக்கிராமமும் மூழ்கியது.மக்கள் அனைவரும் இருதய ஆண்டவர் ஆலயத்தில் தஞ்சம் அடைந்தனர். ஆலயத்தின் மேற்பகுதியிலும் ஆற்றுப்பகுதியிலும் பரண்களை அமைத்து சில நாட்கள் மக்கள் வாழ்ந்ததாகவும் இதனாலும் வெள்ளப்பெருக்கினாலும் சேதமடைந்த ஆலயத்தினை 1958 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அருட் தந்தை பொங்கிலர் அவர்கள் கிராம மக்களின் ஆதரவுடன் புனர்நிர்மானம் செய்ததாகவும் நம்பப்படுகிறது.

1964ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலினால் இவ்வாலயம் தாக்கப்பட்டு உரோமானிய முறையில் கட்டப்பட்ட அதன் முன்முகப்பை இழந்ததாகவும் அருட்தந்தை அரசரெட்ணம் அவர்களின் காலத்தில் அது திருத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

எமது நாட்டில் குறிப்பாக வடக்குகிழக்குப் பகுதிகளில் 1980ளில் இடம்பெற்ற சிறுசிறு வன்முறைகள் 1983ஆம் ஆண்டு யூலை கலவரத்துடன் தீவிரமடைந்த ஒரு உரிமைப்போராட்டமாக உருப்பெற்றது. நாடு பூராகவும் பரவி குறிப்பாக தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ் மக்களை பெருவாரியாக இடம்பெயரச்செய்தது. இக்கிராம மக்கள் மட்டுமன்றி மூதூர் கிராம மக்கள் உட்பட அனைத்து கிராம மக்களும் ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாலய வளாகத்தில் தஞ்சமடைந்தனர்.பல வருடங்கள் அம் மக்களின் வாழ்விடமாக இவ்வாலய வளாகமே காணப்பட்டுள்ளது.


அக்கால நிலைமைகளை பார்க்க முடியாது எனப்பெருமூச்சு விட்டுக்கொண்டார். அனைத்து வழிகளாலும் துன்பப்பட்ட துயரப்பட்ட ஓர் காலப்பகுதி அது. பெரும்பாலான நாட்கள் அங்கு அழுகைச்சத்தம் ஏதோ ஓர் பகுதியில் இருந்து கேட்டுகொண்டே இருந்தது.


அதனை சென்று பார்க்கக்கூட மக்கள் தயங்கினார்கள் துக்ககரமான செய்திகள் தான் தினம் தினம் மக்களை வந்தடைந்தது மக்கள் வாழ்ந்தார்களா? அல்லது வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்களா? என்று தெரியவில்லை

உயிரைப் பாதுகாத்துக் கொள்வதென்பதே பெரும் சவாலான விடயமாக இருந்தது எப்போது வேண்டுமானாலும் யாருக்கு என்றதும் எதுவும் நடக்கலாம் என்று இருந்த நாட்கள் அவை ஆனாலும் இருதய ஆண்டவர் அனைவரையும் பாதுகாத்தார் தன்னுடைய இரக்கத்தை வெளிக்காட்டினார் ஆலய முகப்பில் எழுதப்பட்டுள்ள "நானே நல்ல ஆயன்" எனும் வாக்கியத்தைப் போல நானே நல்ல ஆயன்என்று தன் மந்தைகளை எதிரிகளிடமிருந்து பாதுகாத்தார்.

படிப்படியாக யுத்தம் குறைவதும் மக்கள் வீடுகளுக்கு செல்வதும் பின்னர் ஆலயத்திற்கும் ஓடி வருவதற்கே காலங்கள் சென்றது நிலைமைகள் மாறவில்லை இறுதியாக 2006ஆம் ஆண்டு தொடக்கம் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தினாலும் இக்கிராம மக்களும் பாதிக்கப்பட்டு ஆலயத்தில் தஞ்சமடைந்தனர் தற்போது யுத்தம் நிறைவடைந்தும் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகின்ற போதும் வெளியிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்ற மக்களில் சிலர் இன்னும் தமது சொந்த ஊருக்கு திரும்பாதது சோகமானதுதான் யுத்தம் விட்டுச் சென்ற வீடுகளில் இருந்து மக்கள் மீளமுடியாமல் தவிப்பது அதன் தாக்கங்கள் நீடிப்பதும் மழை நின்ற பின்பும் தூறல் போலத்தான்

இக்கிராம மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, மண் அகழ்தல், கல் உடைத்தல், வியாபாரம் போன்ற பல தொழில்களில் ஈடுபட்டாலும் கல்வி அளவில் தேர்ந்தவர்களாக அரச தனியார் துறைகளிலும் பணியாற்றுகின்றார்கள். 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்துவருகின்றார்கள். மாணவர்களின் கல்வி நிலைமைகள் சிறப்பாக காணப்படுகின்றது.





ஆலய வளாகத்தை காலை, மாலை வேளைகளில் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அலங்கரிக்கின்றார்கள். ஆலயத்தை ஒட்டியதாக அவர்களது செயற்பாடுகள் காணப்படுகின்றது. மாணவர்களின் வளர்ச்சிக்கு பங்குத்தந்தை அருட்சகோதரிகளுடன் இணைந்து கல்வி அறிவு படைத்தவர்களும் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றார்கள்.

பெற்றோர்களின் பங்களிப்பு சிறப்பாக காணப்படுகின்றது. ஓர் சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி சரியான பாதையில் இருதயபுரம் பயணித்துக்கொண்டிருக்கின்றது. அயல் கிராமங்களுக்கு ஓர் வழிகாட்டியாக மிளிர வேண்டும் என்பதே எமது பேரவாவாகும்.

அருட்சகோதரிகள் நிரந்தரமாக இங்கு இருந்து பணியாற்றுகின்றார்கள். இருதயபுரம் தனிப்பங்கானபோது முதல் குருவாக இருந்தவர் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. ஜெயராஜ் கூஞ்சே அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது பழைய ஆலயம் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவதோடு புதிதாக ஓர் அழகிய ஆலயம் அனைவரின் ஒத்துழைப்புடனும் அமைக்கப்பட்டுள்ளது.

துணைப்பங்குகளின் விபரங்கள்.

நாராயணபுரம் - குழந்தை இயேசு ஆலயம்

கிளிவெட்டி

3ம் கொளணி

சோமபுர - புனித யூதாததேயு ஆலயம்

தொடர்ச்சி 09ம் பக்கத்தில்............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08ம் பக்கத் தொடர்ச்சி .....................திரு இருதய ஆண்டவர் ...........

பங்கில் இருந்து உருவான அருட்சகோதரி
அருட்சகோதரி மரிய வசந்தி.

# பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்கள்

- அருட்பணியாளர். சாளஸ் பொனல் - 1912 - 1914
- அருட்பணியாளர். ஜே. லாசரஸ் - 1914 - 1932
- அருட்பணியாளர். அலோசியஸ் மேரி - 1932 - 1941
- அருட்பணியாளர். பி. P. யோசப் மேரி - 1941 - 1947
- அருட்பணியாளர். ஜோர்ச் கெமில்டன் - 1947 - 1953
- அருட்பணியாளர். ஜோசப் பொங்லர் - 1953 - 1958
- அருட்பணியாளர். குளோட் டெய்லி - 1958 - 1960
- அருட்பணியாளர். F. லேங் - 1960 - 1961
- அருட்பணியாளர். ஏ. சி. ஞானப்பிரகாசம் - 1961 - 1966
- அருட்பணியாளர். காமினி பெர்னான்டோ - 1966 - 1967
- அருட்பணியாளர். டொமினிக் ஸ்கல்ட் ரெல்லா - 1967 - 1968
- அருட்பணியாளர். J. S. அரசரெத்தினம் - 1968 - 1976
- அருட்பணியாளர். ரீ. பயஸ்பத்மராஜா - 1976 - 1978
- அருட்பணியாளர். E. A. J. சொய்சா - 1978 - 1979
- அருட்பணியாளர். அன்ரனி லீயோ - 1979 - 1983
- அருட்பணியாளர். பி. இருதயநாதன் - 1984 - 1985
- அருட்பணியாளர். ஜீலியஸ் ராசையா - 1986 - 1988
- அருட்பணியாளர். ஜே. எஸ். மொறாயஸ் - 1989 - 1993
- அருட்பணியாளர். ஐ.சந்திரா - 1993 - 1994
- அருட்பணியாளர். சிறிதரன் சில்வெஸ்டர் - 1994 - 1995
- அருட்பணியாளர். எஸ். பிலிப் - 1995 - 1996
- அருட்பணியாளர். சாந்தன் இம்மானுவேல் - 1996 - 2002
- அருட்பணியாளர். ஜோ. டன்ஸ்டன் - 2002 - 2004
- அருட்பணியாளர். எஸ். பிலிப் - 2004 - 2005
- அருட்பணியாளர். S. இக்னேசியஸ் - 2005 - 2006
- அருட்பணியாளர். L. ஜெயகாந்தன் - 2006 - 2007
- அருட்பணியாளர். ஜெயராஜ் கூருஞ்ஞே அ. ம. தி - 2007 - 2014
- அருட்பணியாளர். D. அன்று ஸ்டீபன் - 2015 - 06 மாதங்கள்
- அருட்பணியாளர். ஜே. சுதர்ஷன் - 2015 - 2018
- அருட்பணியாளர். H. ஜீட் ஜோன்சன் - 2018 - இன்று வரை

திரு.நா.சுரேஸ்
திரிகூடம்,
மூதூர்.

# புனித ஜோசே வாஸ் அடிகளார் பயன்படுத்திய திருச்சிலுவையை நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கான நோக்கங்கங்கள்

1. நடந்து முடிந்த புனித யோசே வாஸ் ஆண்டிற்காக நன்றி செலுத்துதல்.
2. அடிப்படைவாதிகளின் சவால்களுக்கு மத்தியில் வாழும் கத்தோலிக்கரின் நம்பிக்கையை (விசுவாசத்தை) புதுப்பித்தல்.
3. அனைத்து இயற்கை அழிவுகள், அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள.
4. டெங்கு மற்றும் அனைத்துத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கப்பட.
5. உயிராபத்துமிக்க விபத்துக்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க.
6. போதைப் பொருட்களிலிருந்து இளைய தலைமுறையினரைப் பாதுகாக்க.
7. நாட்டில் சீரான பொருளாதார, அரசியல் சூழல் நிலவ.
8. கல்கமுவவில் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் புனித யோசே வாஸ் தேசிய திருத்தலத்தின் கட்டுமானப் பணிகளுக்கான நன்கொடையைப் பெற்றுக்கொள்ள.

## மகாகல்கமுவவில் இருக்கும் புனித ஜோசே வாஸ் அடிகளார் உபயோகப்படுத்திய திருச்சிலுவையின் திருயாத்திரை

## திருகோணமலை மறைமாவட்டம்

## 16, 17, 18 ஐப்பசி 2018

## "நன்றியோடு கூட ஆராதிக்கின்றோம்"

**16.10.2018 செவ்வாய்**

காலை 11:00 : மட்டக்களப்பு மறைமாவட்டப் பிரதிநிதிகளிடமிருந்து வெருகல் பாலத்தில் திருச்சிலுவையை பொறுப்பேற்றல்.
மதியம் 12:00 : புனித யூதா ததேயு ஆலயம், சோமபுர - இருதயபுரப் பங்கு (15 நிமிடங்கள்).
12:15 : புனித யூதா ததேயு ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
12:45 : திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரப் பங்கு (1 ? மணித்தியாலம்).
02:15 : திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
02:30 : வேதத்தீவு (30 நிமிடங்கள்).
03:00 : வேதத்தீவிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
மாலை 04:00 : அமரர் மைக்கல் டி மெல்லோ கல்லறை, மூதூர்ப் பங்கு (15 நிமிடங்கள்)
04:15 : அமரர் மைக்கல் டி மெல்லோ கல்லறையிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
04:30 : மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலயம் (30 நிமிடங்கள்).
05:00 : மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்
மாலை 05:15 : புனித அந்தோனியார் ஆலயம், மூதூர்ப் பங்கு.
மாலை 6:00 மணி முதல் மாலை 7:00 மணிவரை: பொது ஆராதனை.
மாலை 7:00 மணி பொது மக்களுக்கான ஆராதனை நேரம்
மாலை 9:00 மணி: ஆராதனை முடிவு.

**17-10-2018: புதன்**

காலை 06:00 : மூதூரிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
காலை 07:00 : புனித பாத்திமா ஆலயம், தம்பலகாமப் பங்கு (30 நிமிடங்கள்).
கந்தளாய்ப் பங்கு மக்கள் திருச்சிலுவை ஆராதனைக்காக தம்பலகாமத்தில் ஒன்றுகூடுவர்.
காலை 07:30 : தம்பலகாமத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
08:00 : புனித அந்தோனியார் ஆலயம், சீனன்குடாப் பங்கு (30 நிமிடங்கள்).
08:30 : சீனன்குடாவிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
09:00 : புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம், ஆண்டாங்குளப் பணித்தளம் (30 நிமிடங்கள்).
09:30 : ஆண்டாங்குளத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
09:45 : புனித சதா சகாய அன்னை ஆலயம், அன்புவழிபுரம், பாலையூற்றுப் பங்கு (30 நிமிடங்கள்).
10:15 : அன்புவழிபுரத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
10:30 : புனித லூர்து அன்னை திருத்தலம், பாலையூற்றுப் பங்கு (1 மணித்தியாலம்)
11:30 : பாலையூற்றிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
மதியம் 12:00 : புனித மரியாள் கல்லூரி (30 நிமிடங்கள்)
12:30 : புனித மரியாள் கல்லூரியிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
12:45 : புனித சூசையப்பர் கல்லூரி (30 நிமிடங்கள்).
01:15 : புனித சூசையப்பர் கல்லூரியிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
01:30 : குழந்தை இயேசு ஆலயம், உவர்மலைப் பங்கு (45 நிமிடங்கள்).
02:15 : உவர்மலையிலிருந்து யாத்திரை ஆரம்பம்.
02:30 : புனித குவாடலூப்பே அன்னை ஆலயம், குவாடலூப்பே பங்கு (1 மணித்தியாலம்).
பி.ப 03:30 : புனித குவாடலூப்பே ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
03:45 : புனித யூதா ததேயு ஆலயம், இலிங்கநகர், உவர்மலைப் பங்கு (30 நிமிடங்கள்).
04:15 : புனித யூதா ததேயு ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
04:30 : கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியாப் பங்கு (30 நிமிடங்கள்).

மாலை 05:00 : கிறிஸ்து அரசர் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
05:30 : புனித மரியாள் பேராலயம், பேராலயப் பங்கு.
மாலை 6:00 மணி முதல் மாலை 7:00 மணிவரை: பொது ஆராதனை.
மாலை 7:00 மணி பொது மக்களுக்கான ஆராதனை நேரம்.
மாலை 10:00 மணி: ஆராதனை முடிவு.

**18-10-2018: வியாழன்**

காலை 06:00 : புனித மரியாள் பேராலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
06:15 : புனித வனத்து அந்தோனியார் ஆலயம், செல்வநாயகபுரப் பங்கு (30 நிமிடங்கள்).
06:45 : புனித வனத்து அந்தோனியார் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
07:00 : இறை இரக்கத் திருத்தலம், அலஸ்தோட்டப் பங்கு (45 நிமிடங்கள்).
07:45 : இறை இரக்கத் திருத்தலத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
08:00 : புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவுப் பங்கு (45 நிமிடங்கள்).
08:45 : புனித யோசே வாஸ் இளங்குருமடம், சாம்பல்தீவு (15 நிமிடங்கள்)
09:00 : புனித யோசே வாஸ் இளங்குருமடத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
09:15 : புனித சூசையப்பர் ஆலயம், நிலாவெளி - நிலாவெளிப் பங்கு (45 நிமிடங்கள்)
10:00 : புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
10:15 : புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயம், நிலாவெளிப் பங்கு (30 நிமிடங்கள்).
10:45 : புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
11:00 : புனித செபஸ்தியார் ஆலயம், புடவைக்கட்டு - குச்சவெளிப் பங்கு (30 நிமிடங்கள்).
11:30 : புனித செபஸ்தியார் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்.
மதியம் 12:00 : தென்னைமரவாடியில் யாழ்ப்பாண மறைமாவட்டப் பிரதிநிதிகளிடம் திருச்சிலுவை கையளிப்பு.

தகவல் : குருமுதல்வர் அருட்பணியாளர். தே. கிங்ஸ்லி றொபட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீமைகள் மறைய வேண்டும்.

Fr. NC

- கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
- இரண்டு வரிகள் மட்டுமே இடம் மாறியுள்ளன.
- கண்டுபிடித்து சரியாக வடிவமையுங்கள்.

- ❖ முதலாம் இடம் ரூபா 500/-
- ❖ இரண்டாம் இடம் ரூபா 300/-
- ❖ மூன்றாம் இடம் ரூபா 200/-
- ❖ முடிவுத்திகதி 25.10.2018

### இதோ கவிதை வரிகள்

- ❖ வேண்டுவோம் இறைவனை ஒன்றாகியே
- ❖ ஏங்கும் மக்கள் பெருகி எங்கும்
- ❖ வன்முறை வழிகளால் வதைபட்டே
- ❖ வாடிப்போன வாழ்வுகளும்
- ❖ கொடுமையின் வழியில் வாழும் மனிதரால்
- ❖ பாடுகள் கண்டு அழியும் வாழ்வுகள்
- ❖ வேண்டவே வேண்டாம் மண்ணுக்கு
- ❖ வேரோடு அவைகள் அழிந்தொழிய
- ❖ எங்கே அமைதி எனத்தேடி

## மறைக்கல்வி கற்போம்

01. திருமலையை மறைமாவட்டமாக பிரகடனப்படுத்திய திருத்தந்தை யார்?
திருத்தந்தை 13ம் சிங்கராயர்

02.திருகோணமலை மறைமாவட்டம் எப்பொழுது தனி மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது?
1893ம் ஆண்டு ஆவணி - 25

03. திருமலை பேராலயம் எந்த சபையினரால் நடாத்தப்பட்டுள்ளது?
ஒரற்றோரியன் சபையினரால

04. திருகோணமலையை வழிநடத்தும் தற்போதைய ஆயர் அவர்கள் எத்தனையாவது ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டுள்ளார்?
7வது ஆயராக

05. எமது மறைமாவட்ட குருக்கள் எத்தனை பேர்?
23பேர்

06. ஆராதனை, வணக்கம் இவ்விரண்டையும் தெளிவுபடுத்துக?
கடவுள் - ஆராதனை
மரியாள் - உயர் வணக்கம்
புனிதர் - வணக்கம்

07. புனித கன்னி மரியாவுக்கு உரிய பெருவிழாக்கள் எவை?
புனித கன்னி மரியா இறைவனின் தாய்
புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு
புனித கன்னி மரியாவின் அமல உற்பவம்

08. திருக்காலங்கள் என்பவை எவை?
திருவழிபாட்டை (திருப்பலியை) கொண்டாடுவதற்காக பயன்படுத்தப்படும் எல்லாக் காலங்களும்

09. மறைப்பணியாளர்கள் என்பவர்கள் யாவர்?
இவர்கள் ஆயர்கள். அருட்பணியாளர்கள் தங்கள் அருள்பணி வாழ்வில் புனிதம் கொண்டு வாழ்ந்தவர்கள்

10. திருமுழுக்கு எத்தனை வகைப்படும்?
தண்ணீர் திருமுழுக்கு
இரத்தத் திருமுழுக்கு
விருப்பத் திருமுழுக்கு

### ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 37
### எஸ்ரா 01 ~ 05 அதிகாரங்கள்

01. ஆலயத்தை திருப்பிக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்த அரசன் யார்?
விடை :..........................................................................................

02. நெபுக்கத்னேசர் ஆண்டவரின் கோவிலுக்கு உரிமையான பாத்திரங்களை எடுத்து வந்து எங்கே வைத்தார்?
விடை :..........................................................................................

03. பாரசீக மன்னன் அர்தக்சஸ்தா எழுதிய குற்றச்சாட்டு எந்த மொழியினால் எழுதப்பட்டது?
விடை :..........................................................................................

04. மக்களை அடிமைத்தனத்தில் சிறைப்படுத்திய அரசன் யார்?
விடை :..........................................................................................

05. இஸ்ரயேல் மக்கள் எப்போது ஆண்டவருக்கு எரிபலிகளை ஒப்புக் கொடுத்தார்கள்?
விடை :..........................................................................................

06. "விண்ணக கடவுளான ஆண்டவர் மண்ணகத்திலுள்ள எல்லா அரசுகளையும் என்னிடம் ஒப்படைத்துள்ளார். தமக்கென ஒரு கோவிலைக் கட்டும்படி அவர் என்னை நியமித்துள்ளார்." இவ்வாறு கூறிய அரசன் யார்?
விடை :..........................................................................................

07. இறைவாக்கு உரைத்தவர்கள் யார்?
விடை :..........................................................................................

08. பாரசீக மன்னன் தாரிபு ஆட்சியின் ...................... ஆண்டுவரை எருசலேமிலுள்ள கடவுளின் கோவில் வேலை நிறுத்தப்பட்டிருந்தது?
விடை :..........................................................................................

09. இஸ்ரயேல் மக்கள் எருசலேமில் ஒன்று கூடுவது எப்போது?
விடை :..........................................................................................

10. கோவிலை அழித்த அரசன் யார்?
விடை :..........................................................................................

பெயர் :..........................................................
பங்கு :..........................................................
முகவரி :..........................................................
முடிவுத்திகதி : 25.10.2018

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

### இயேசு சிறுவர்களை அழைத்தல்

- ❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- ❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- ❖ 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..........................................
முகவரி ..........................................
பங்கு ..........................................
தரம் ..........................................
முடிவுத் திகதி 25.10.2018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 29
## 2 கொரிந்தியர் அதிகாரம் 10-13வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊ | தி | ய | ம் | ■ | பா | ரா | ட் | டி/ட | ■ |
| ■ | அ | வ | ரோ | டு | வா | ழ் | வோ | ம் | ■ |
| போ | ■ | க | ண் | தி | ற | ந் | து | ■ | செ |
| ரா | ■ | ■ | டி | அ | து | ப | ற் | நா | ல் |
| ட் | சூ | ழ் | ச் | சி | யா | ய் | ■ | ■ | வ |
| ட | ■ | ம் | வு | து | எ | மை | தீ | ■ | ம் |
| ம் | ■ | தொ | ண் | ட | ர் | க | ள் | ■ | ■ |
| ■ | சி | ற | ந் | த | ப | ணி | யா | ள | னே |
| தூ | ய | மு | த் | த | ம் | ■ | து | த் | தீ |
| க | ற் | பு | ள் | ள | க | ன் | னி | யா | க |

01. பேராட்டம்
02. கற்புள்ள கன்னியாக
03. தூய முத்தம்
04. சிறந்த பணியாளனே
05. செல்வம்
06. அவரோடு வாழ்வோம்
07. கண் திறந்து
08. நாற்பது அடி
09. பாராட்ட/டி
10. ஊதியம்
11. தீத்து
12. தொண்டர்கள்
13. சூழ்ச்சியினால் / சூழ்ச்சியாய்
14. தீமை எதுவும்

பங்குபற்றியோர் ~ 40 பேர்
சரியானவிடையளித்தோர் ~ 23 பேர்



### பரிசுக்குரியவர்கள்:-

| 1ம் பரிசு 500/= | 2ம் பரிசு 300/= | 3ம் பரிசு 200/= |
|---|---|---|
| செல்வன். எட்மன் வெரோணியஸ் 3ம் வட்டாரம், நிலாவெளி | திருமதி. புஸ்பா சேவியர் 58/6. மத்திய வீதி, உவர்மலை | ச. கன்சிக்கா 3ம் வட்டாரம், நிலாவெளி |

### பாராட்டுக்குரியவர்கள்

01. இ. திவக்சிக்கா ~ பாலையூற்று
02. சு. சுவேக்கா ~ பாலையூற்று
03. கு. புஸ்பம் ~ பாலையூற்று
04. மு. றோஸ்மலர் ~ கன்னியா
05. பெலிசியன் ஆன்சிரா ~ பாலையூற்று
06. எஸ். வெலோரியா ~ இலிங்கநகர்
07. செ. நிவேதிகா ~ கன்னியா
08. டி. இவாஞ்சலின் ~ உவர்மலை
09. டெலிஷா நெவில்ராஜ் ~ குவாடலூப்பே
10. கிறிஸ் யஸ்வின் ~செல்வநாயகபுரம்
11. சு. பகீரதன் ~ அன்புவழிபுரம்
12. L. S. பியூரா ~ பேராலயம்
13. றொ. மில்ராஜ் ~செல்வநாயகபுரம்
14. தே. சமில்டன் ~ நிலாவெளி
15. செ. டிலாசிஹா ~ கன்னியா
16. சு. கௌசல்யா ~ பாலையூற்று
17. கிறிஸ்டி தேஷாரிக்கா ~ உவர்மலை
18. தே. செல்டன் ~ நிலாவெளி
19. செ. தஷாசிஹா ~ கன்னியா
20. அ. கரோலினி கிறீப்திக்கா ~ பேராலயம்

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 30
## கலாத்தியர் அதி 01 - 06 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | | | | | | | | ■ | கு |
| ■ | ■ | ■ | ஏ | | | | ■ | கு | |
| ■ | ப | | | | | | நா | | |
| | அ | | | | | ■ | | | |
| | ■ | | | | | ஆ | | | |
| | அ | | | | | ■ | | | |
| | ■ | அ | | | ■ | ■ | | | |
| | | | | | | த | | ■ | |
| | ஒ | | | | | | | ■ | |
| ம | | | | | | | | தா | ■ |

01. குறு......ய காலத்.....ல்
02. நாழி.......யேனும்
03. தாயி..... வயிற்.......ல்
04. மகிழ்........து பாடு
05. அரு.......னார்
06. அடி.........
07. தழு.......புக.......
08. பணி.......ள........ய்
09. அறுவ........ செய்.......ம்
10. குடிமக்.......ள்
11. ஆசிபெ.......ம்
12. அரு........பணி
13. ஏமா........து
14. ஒன்......க்கொ......று

பெயர்:.......................................................
முகவரி:.......................................................
பங்கு:.......................................................

முடிவுத்திகதி 25.10.2018

## இவ்வாண்டுக்கான சிறப்புப்போட்டி
### இறைவார்த்தை புதையல் போட்டி - 1
### புனித மாற்கு நற்செய்தி
### 1- 4 அதிகாரங்கள்
### போட்டி முடிவுகள்




பங்கு பற்றியவர்கள் - 96பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் - 57 பேர்

### பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
றி. ஷாதேஸ்
இல : 529/31, ஏகாம்பரம் வீதி
கேணியடி,
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
ஜே. தம்மிக்கா.
இல : 676, அன்புவழிபுரம்,
திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
என். ஆஷ்ஹா
இல : 8/34, 26வது ஒழுங்கை
திருச்செல்வம் வீதி,
இலிங்கநகர்,
திருகோணமலை




### பாராட்டுக்குரியவர்கள்


01. பிலிப் பெலிசியன் சேவியர் - பாலையூற்று
02. சு. கௌசல்யா - பாலையூற்று
03. சு. சுவேக்கா - பாலையூற்று
04. நி. சஜீவ்காந்த் - இருதயபுரம்
05. எஸ். கல்யாணி - அன்புவழிபுரம்
06. ஜிரின் க்ளோரியா. எல் - அன்புவழிபுரம்
07. நி. சுகுனேந்திரன் - அக்கரைப்பற்று
08. அ. டில்ருக்ஷனா - குவாடலூப்பே
09. எஸ். லிற்துஜன் - கன்னியா
10. அ. கரோளினி கிறீப்திக்கா - பேராலயம்
11.ஜே. ஷெபானா ஆன் - கன்னியா
12. திருமதி. டயானா ரூபன் - அன்புவழிபுரம்
13. நி. கிதுஷாந் - இருதயபுரம்
14. ஜி. ரவிதா - கன்னியா
15. ர. மேரிகில்டா - கன்னியா
16. டீ. சுஜீவன் - சிறியகுருமடம்
17. ரூ. நிபுக்ஷன் குரூஸ் - மூதூர்
18. புஸ்பா சேவியர் - உவர்மலை
19. பி. ஜக்குலின் - கன்னியா
20. ஹெலனா. அ - பாலையூற்று
21. எப். ஆர். பிராங்லின் - குவாடலூப்பே
22. செ. டினாசிஹா - கன்னியா
23. எ. றிபிந் வெரோனியஸ் - நிலாவெளி
24. ரி. ஜெரோம் - சாம்பல்தீவு
25. ஜே. ஜெசிந்தா - கன்னியா
26. ஆர். திஷானி - இருதயபுரம்
27. செ. நிவேதிகா - கன்னியா
28. ஏ. சாளினி - இருதயபுரம்
29. பி. கொன்சலா டினீஷியா - உவர்மலை
30. எஸ். சரோன் டொமினிக்கன் - நிலாவெளி
31. ஏ. இருதயதாஸ் - குவாடலூப்பே
32. எ. லினாசியோனி - நிலாவெளி
33. இ. ஜெசானியா - பேராலயம்
34. நா. மெற்றில்டா - பாலையூற்று
35. ஜே. ஷெல்டன் - பேராலயம்
36. எஸ். சிங்கராஜா - இலிங்கநகர்
37. கே. பவித்திரா - இருதயபுரம்
38. ஜே. அல்போன்ஸ் - இருதயபுரம்
39. எஸ். அலக்ஸ்சாந்தன் - இருதயபுரம்
40. றி. சர்மிளா - குவாடலூப்பே
41. கே. ரக்ஷியா - இருதயபுரம்
42. ஆர். பிரித்திவிராஜ் - கன்னியா
43. ஜே. சி. டானியாலா - பேராலயம்
44. எஸ். ஜதுசன் - இருதயபுரம்
45. ஆர்.லக்ஷனா - இருதயபுரம்
46. இ. ஜெசூரன் - பேராலயம்
47. கே. புஸ்பம் - பாலையூற்று
48. செ. தனுசிஹா - கன்னியா
49. ஏ. மிஸ்டிக்கா - குவாடலூப்பே
50. கு. தர்ஷினி - பாலையூற்று
51. ஜெ. பெவன் - பேராலயம்
52. வெலோரிய சஜீ - இலிங்கநகர்
53. எம். ரோஸ்மலர் - கன்னியா
54. எஸ். கம்சாளினி - இருதயபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின்

# ஞானப்பெற்றோர் ஆண்டு சிறப்பு நிகழ்வுகள் – 2018












## அருள்பணியாளரின் உருவாக்கத்தில் பெண்களின் பங்கு

அருள்பணியாளரின் உருவாக்கப் பணியில் இன்னும் பல பெண்கள் பங்கேற்பது மிகவும் அவசியம் என்று ஆயர்கள் பேராயத்தின் தலைவர், கர்தினால் Marc Ouellet அவர்கள் கூறினார். பாலின முறைகேடுகள் என்ற பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ள திருஅவை, இந்தப் பிரச்சனையை தீர்க்க, அரசியல் வழிகளை அல்ல, மாறாக, ஆன்மீக வழிகளை தேடுவது அவசியம் என்று கர்தினால் Ouellet அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

**ஆதாரம் : வத்திக்கான் செய்திகள்**


## இளையோரின் கனவுகளில், பாதுகாப்பு முதலிடம்




இன்றைய உலகில் வாழும் இளையத் தலைமுறையினர், குடும்பம், தாய் நாடு, கலாச்சாரம் மற்றும் மத நம்பிக்கை என்ற பல வேர்களை இழந்துவிடும் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜெனீவாவில் நிகழும் ஐ.நா அவை கூட்டங்களில் திருப்பீடத்தின் சார்பாகப் பங்கேற்கும் பேராயர் இவான் யூர்க்கோவிச் அவர்கள், செப்டெம்பர் 14, இவ்வெள்ளியன்று அந்நகரில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் அவையின் 39வது அமர்வில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

## அன்புவழிபுரம்
## தூய சதாசகாய அன்னை ஆலய
## வருடாந்த திருவிழா





## வேற்றினத்தவர் மீது அச்சம்

### பற்றிய கருத்தரங்கின் அறிக்கை



இறைமகன் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டுள்ள நாங்கள், அனைத்து மனிதரும் சமமான மாண்பு பெற வேண்டும், அனைவருக்கும் ஒரே விதமான மனித உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பனவற்றை உறுதியாக நம்புகிறோம் என்று, உரோம் நகரில் நடைபெற்ற ஒரு பன்னாட்டு கருத்தரங்கின் இறுதியில் அறிக்கை வெளியிடப்பட்டது.

வேற்றினத்தவர் மீது அச்சம் என்ற மையக்கருத்துடன். செப்டெம்பர் 18ஆம் திகதி முதல், 20ஆம் திகதி வரை உரோம் நகரில் நடைபெற்ற கருத்தரங்கின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 113 கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## இளையோர் மீது கூடுதல் கவனம் செலுத்த அழைப்பு



ஒவ்வொரு துறவற சபையும் அதன் தனிவரத்திற்கேற்ப பணியாற்ற, கத்தோலிக்க திருஅவை, துறவு சபைகளைத் தூண்டி வருகிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்திருந்த மரியாவின் தூய இதயத்தின் பிள்ளைகள் என்ற சபையைச் சேர்ந்த துறவிகளிடம் கூறினார். 19ம் நூற்றாண்டின் சமகாலத்தில் வாழ்ந்த அருள்பணி பிராஸ்ஸினெத்தி அவர்களும், புனித தொன் பொஸ்கோ அவர்களும். இளையோர் மீது தனி கவனம் செலுத்தினர் என்பதை தன் உரையில் சிறப்பாகக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோரை மையப்படுத்தி உலக அயர்கள் மாமன்றம் நடைபெறவிருப்பதை மனதில் வைத்து, இச்சபையினர். இளையோர் மீது கூடுதல் கவனம் செலுத்தமாறு கேட்டுக்கொண்டார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org